2017 பெப்ரவரி 23
வியாழன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.அவ்வல் பிறை 25 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 032

NAVAMANI DAILY நவமணி දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
QD / 154 / NEWS / 2017



அவுஸ்திரேலியாவுக்கு ஆறுதல் வெற்றி





04 இலங்கையில் ஓரினச் சேர்க்கைக்கு அங்கீகாரமளிப்பது பயங்கரமானது



09 பேரினவாதிகளுக்கு தீனி போடும் தம்புள்ளை பள்ளி

# கந்தளாய் முஸ்லிம் மீனவர்கள் மீது தாக்குதல்

## காடையர்கள் அட்டகாசம்
## கல்வீச்சில் பலருக்கு காயம்


கந்தளாய் பிரதேச முஸ்லிம் மீனவர்கள், அப்பிரதேச பெரும்பான்மை மீனவர்களுக்கு எதிராக இன்று கந்தளாய் பிரதேச செயலாளர் காரியாலயத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த பிரதேச பெரும்பான்மை மீனவர்கள் கடந்த சில வருடங்களாக தமது மீன் பிடி தொழிலுக்குத் தடையாக இருந்து வருவதாகத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகளோ அல்லது 11 »»»»








பயங்கரவாத தடைச் சட்டம்

## பாராளுமன்றில் விரைவில் நகல் அறிக்கை

அ. அருண் பிரசாந்த்

பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பிலான நகலொன்று வெகு விரைவிலேயே பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று வெளிவிவகார 11 »»»»

தம்புள்ளை கையெழுத்து வேட்டை;

## முஸ்லிம் பெண்ணிடம் பலவந்தமாக கையெழுத்து

தம்புள்ளைப்பள்ளிக்கு காணி வழங்க வேண்டாமென இடம்பெற்றுவரும் கையெழுத்து திரட்டும் நடவடிக்கையின் போது முஸ்லிம் பெண்ணொருவரிடம் பலவந்தமாக கையொப்பம் வாங்கியமை தொடர்பில் பொலி ஸில் 11 »»»»



## பகிடிவதைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்

ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தல்

பல்கலைக்கழகங்களில் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள பகிடிவதை குறித்து பல்கலைக்கழக நிர்வாகங்களுடன் இணைந்து விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற மத்துகம, ஆனந்த தேசிய கல்லூரியின் 75 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். 11 »»»»

## முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளால் கண்டி மாவட்ட பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தவும் முயற்சி

முதலமைச்சர் சரத் ஏகநாயக்க



கண்டி நிருபர்

கண்டி மாவட்டத்தில் பௌத்த பிக்குமார் தலைமையிலான சில குழுக்கள் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுவது மாவட்டத்தின் பாதுகாப்புக்கு பெரும் 11 »»»»

## படகு விபத்தில் உயிரிழந்தோரின் பூதவுடல்கள் நல்லடக்கம்

பீ.ஏ. முக்தார், பேருவளை

களுத்துறை கட்டுக்குறுந்த கடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற படகு விபத்தில் மரணமான 10 பேரின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை பேருவளை பொல்கெட்டுவ கத்தோலிக்க 11 »»»»

சீனாவுக்கு அள்ளி வழங்கும் நல்லாட்சி;

## கேப்பாப்புலவு, வில்பத்து, தம்புள்ளைக்கு காணிகளை வழங்க பின்னிற்பதேன்

அசாத் சாலி கேள்வி



ஆதில் அலி சப்ரி

சீனாவுக்கு கொழும்பிலும் ஹம்பாந்தோட்டையிலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த வழங்கியதற்கு மேலதிகமாக காணிகளை வழங்கத் தயாராகவுள்ள நல்லாட்சி அரசாங்கம் கேப்பாபுலவு, வில்பத்து, தம்புள்ளை 11 »»»»

## ஐ.ம.சு. முன்னணியுடன் உறவுகளை முறித்துக் கொள்வதாக விமல் அறிவிப்பு

சுயாதீனமாக செயற்பட அனுமதியும் கோரினார்



அ. அருண் பிரசாந்த்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடனான சகலவிதமான அரசியல் உறவுகளையும் முறித்துக்கொள்வதாக நேற்று பாராளுமன்றில் தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணி, பாராளுமன்றில் 11 »»»»

## ஜனாதிபதி செயலகத்துக்கு முன் வடக்கு மக்கள் ஆர்ப்பாட்டம்

தகவல்கள் கோரவும் திட்டம்

ஆதில் அலி சப்ரி

வடக்கு மக்கள் முகங்கொடுத்துவரும் பல்வேறு பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரும் வகையில் வடக்கிலிருந்து வரும் 300க்கு மேற்பட்டோர் 11 »»»»

## கல்விமான் கலாநிதி சஹாப்தீன் காலமானார்



கல்விமானும் தொழில் அதிபரும் ஓய்வு பெற்ற இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தரும் பல்வேறு அரச 11 »»»»



## சைடம் அதிகாரி மீது துப்பாக்கிச் சூடு; உண்மையை வெளிப்படுத்துங்கள்

அநுர குமார சபையில் வலியுறுத்து



அ. அருண் பிரசாந்த்

சைடம் தனியார் மருத்துவக் கல்லூரியின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் வாகனம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தொடர்பில் அரசு உண்மையான தகவல்களை வெளிப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் ஜே.வி.பியின் 11 »»»»

## தெஹிவளை – வெள்ளவத்தை ரயில் பாதை இன்று மூடப்படும்

(மினுவாங்கொடை நிருபர்)

தெஹிவளை முதல் வெள்ளவத்தை வரையிலான கரையோர ரயில்வே பாதை, இன்று (23) காலை 10 மணி முதல், 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 4 மணி வரை, மிகப் பழைமையான பாலம் ஒன்றினைப் புனரமைப்புச் செய்வதை முன்னிட்டு மூடப்பட்டிருக்குமென, ரயில்வே போக்குவரத்து நடவடிக்கை அத்தியட்சகர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம், மாத்தறை, காலி, அளுத்கமை ஆகிய இடங்களிலிருந்து கொழும்பு, கோட்டையை நோக்கி வரும் அனைத்து ரயில் சேவைகளும் தெஹிவளை ரயில் நிலையம் வரையிலும், இதேநேரம் மாத்தறை, காலி, அளுத்கமை நோக்கி, கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் ரயில் சேவைகள் யாவும் , தெஹிவளை ரயில் நிலையத்திலிருந்து சேவைகளை ஆரம்பிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் சகல ரயில்களும், வெள்ளவத்தை ரயில் நிலையம் வரை சேவைகளை மட்டுப்படுத்தியுள்ளதால், பயணிகள் தமது பிரயாண ஒழுங்குகளை முறையாக ஏற்படுத்திக் கொள்ளுமாறும் அவர் பயணிகளிடம் வேண்டியுள்ளார்.

## கழிவகற்றும் டிப்பர்கள் வழங்கி வைப்பு

(குருநாகல் இக்பால் அலி)

திண்மக் கழிவு முகாத்துமைத்துவ வேலைத்திட்டத்தின் மத்திய மாகாணத்திலுள்ள கழிவகற்றும் டிப்பர்கள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயகவினால் வழங்கி வைக்கப்பட்டது.

மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை தம்புள்ளை, ஹரிஸ்பத்துவ, குண்டசாலை . கம்பளை உள்ளிட்ட பகுதிகளுக்கு இந்த வாகனங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் உள்ளூராட்சி மன்றங்களுக்காக 40 இலட்சம் ரூபா செலவில் மத்திய மாகாண முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் பி. என். என்.ஜயவிக்கிரம உதவி ஆணையாளர் சுனில் ஹேரத் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## மருதமுனை அல்மனாரில் 42 பேர் பல்கலைக்குத்தெரிவு

(மருதமுனை நிருபர்)

2016ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான பெறுபேறுகளின் அடிப்படையில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் 42 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை பெற்றுள்ளதாகவும், இவர்களில் ஏழு மாணவர்கள் மருத்துவத் துறைக்குத் தெரிவாகியுள்ளதாகவும் அதிபர் எம்.ஏ.எம்.இனாமுல்லா தெரிவித்தார்.

கலைப் பிரிவில் 12 மாணவர்களும்,வர்த்தகப் பிரிவில் 5 மாணவர்களும்,விஞ்ஞானப் பிரிவில் 18 மாணவர்களும்,கணிதப் பிரிவில் 7 மாணவர்களுமாக 42 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர். விஞ்ஞானப்பிரிவில் எம்.ஐ.முகமட் ஜெஸான், வர்த்தகப்பிரிவில் எம்.ஜே.ஜெனிப் ஹஸ்மத், ஏ.எஸ். முகமட் சனோஜ் ஆகியோர் 3.ஏ. சித்திகளைப் பெற்றுள்ளனர்.

எம்.ஐ.எம்.ஜெஸான், ஆர்.எப். அஸீபா, எம்.கே.எம்.அப்றாத், ஏ.யு.எம். மியாத், எம்.என்.எப்.றீகனாஸ்;, எம்.ஏ.எம்.அகில், ஏ.றிஸ்தா ஆகியோரே மருத்துவத்துறைக்குத் தெரிவான மாணவர்களாவர் .

## கேப்பாபுலவு மீள்குடியேற்றத்துக்கு யாழ்.பஸ் நிலையத்தில் போராட்டம்

(யாழ் பாறுக் ஷிஹான்)

கேப்பாபுலவு மற்றும் வலிவடக்கு மக்களின் மீள்குடியேற்றத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று நடைபெற்றது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் யாழ்.மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம் திருகோணமலை மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம் உட்பட பல்வேறு அமைப்புக்கள் போராட்டத்தில் பங்கேற்றுள்ளன.

கேப்பாபுலவு மக்களுக்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு தரப்பினரும் போராட்டத்தில் பங்கேற்றுள்ள நிலையில் தற்போது பெரும்பான்மையின மக்களும் இந்த போராட்டத்தில் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுநீரக நோய்களை கட்டுப்படுத்த விசேட குடிநீர் திட்டங்கள்

## அமைச்சர் றவூப் ஹக்கீம்

(நாச்சியாதீவு பர்வீன் )

நாட்டில் இப்போது உள்ள மிகப் பெரும் பிரச்சினை சிறுநீரக நோயினால் பாதிக்கப்படுகின்றவர்களை அதிலிருந்து காப்பாற்றுவதாகும். தூய்மையான குடிநீர் கிடைக்காமையினால் சிறுநீரக நோய் மற்றும் நீரினால் பரவும் ஏனைய நோய்கள் பலவும் பொதுமக்களை பெரிதும் பாதிக்கின்றது. சிறுநீரக நோய்களை கட்டுப்படுத்துவதை மையப்படுத்தி விசேட குடிநீர் திட்டங்களை அனுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களில் செயற்படுத்திவருகிறோம். அவ்வாறான திட்டங்கள் குருநாகல் போன்ற மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

குருநாகல் பொல்பிட்டிகமவில் தெதுறுஓய பாரிய குடிநீர் வழங்கும் திட்டத்தின் ஆரம்பப்பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது,

அதிகமான பொது மக்கள் பயன்பெறும் வகையில் இந்த நீர்வழங்கல் திட்டம் அமையும். இலங்கையில் குழாய்வழியாக குடிநீரை பெற்றுக்கொள்ளுவதில் மிகவும் குறைந்தளவினர் இந்த மாவட்டத்தில்தான் உள்ளார்கள். வெறும் 7 சதவிகிதத்தினரே குழாய்வழி குடிநீரை மொத்த குருநாகல் மாவட்டத்திலும் பெற்றுக்கொள்கின்றனர் என்பது கவலை தரும் விடயமாகும். இந்த நிலை விரைவில் மாறும். இன்று ஆரம்பிக்கப்படுகின்ற தெதுறுஓய நீர்




வழங்கல் திட்டமானது அதற்கான தீர்வாக அமையும்.

கடந்த இரண்டு மாதத்திற்குள் நான்கு பாரிய நீர்வழங்கல் திட்டங்களுக்கான நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளோம். கடந்த 18 ஆம் திகதி மாவனல்லை தொகுதியிலுள்ள ஹெம்மாதகம நீர் வழங்கல் திட்டத்தை பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவின் தலைமையில் ஆரம்பித்து வைத்துள்ளோம்.அவ்வாறே மாத்தளை மாவட்டத்தில் இன்னுமொரு பாரிய மாத்தளை நீர்வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.இவ்வாறு பல நீர் வழங்கல் திட்டங்களை நாடளாவிய ரீதியில் ஆரம்பிப்பதற்கு நாங்கள் ஆரம்பகட்ட ஆலோசனைகளை நடத்தி வருகிறோம்.

அந்த வகையில் இலங்கையில் மூன்றாவது அதிக சனத்தொகையை கொண்ட குருநாகலை மாவட்டம் சம்பந்தமாக எமது அரசுக்கும் கடப்பாடு இருக்கிறது இந்த மாவட்டத்து மக்களின் அடிப்படைத்தேவைகளில் மிக முக்கியமான தான குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதாகும். இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் என்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவ்வாறே இந்த மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் என்னோடு விவாதித்துள்ளனர்.

இப்போது தெதுறுஓயா நீர்வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது அவ்வாறே குளியாப்பிட்டிய மாக்கந்துர நீர்வழங்கல் திட்டமானது மிகவிரைவில் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதேபோன்று கட்டுப்பொத நீர் வழங்கல் திட்டமும் இருக்கிறது இந்த திட்டங்கள் அனைத்தும் திட்டமிட்டபடி நிறைவுபெறுமானால் எமது இந்த ஆட்சி நிறைவடைவதற்கு முன்னர் குருநாகல் மாவட்டத்தில் 65 விகிதமான பிரதேசங்களுக்கு குழாய்வழியாக குடிநீரை பெறக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்.என்றார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க, இலங்கைக்கான கொரியத்தூதுவர் யாம் சங் சுங், வடமேல் மாகாண சபை உறுப்பினர்களான ரிஸ்வி ஜவஹர்ஷா, மொஹான் பெரேரா, தேசிய நீர் வழங்கல் சபையின் தலைவர் பொறியியலாளர் கே .ஏ .அன்சார் மற்றும் அரச அதிகாரிகள்,பிரதேச மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## ஜெயந்தியாய பிரதேசத்தில் தையல் பயிற்சி நிலையம்




(வாழைச்சேனை நிருபர்)

கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலக பிரிவில் மீள்குடியேற்ற கிராமமான ஜெயந்தியாய பிரதேசத்தில் தையல் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியின் ஜெயந்தியாய அபிவிருத்தி குழு தலைவர் எம்.எம்.கரீம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர் அலி கலந்து கொண்டதுடன் அதிதிகளாக பிரதி அமைச்சரின் இணைப்பாளர்களான எச்.எம்;. தௌபிக், முஸ்தபா கலீல், எம்.எஸ். எம்.றிஸ்மின், ஜெயந்தியாய அபிவிருத்தி குழு செயலாளர் எஸ்.முஸ்தக்கின் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் யுவதிகளுக்கான 12 தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டு நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பயிற்சியின் முடிவில் பயிற்சியை முடித்தவர்களுக்கு தையல் இயந்திரம் வழங்கி வைக்கப்படும் என்று பிரதி அமைச்சரின் இணைப்பாளர் எம்.எஸ்.எம்.றிஸ்மின் தெரிவித்தார்.

## இடம்பெயர்ந்தோர் தேவை குறித்து றிப்கான் பதியுதீன் கலந்துரையாடல்

(பாலாவி நிருபர் ஏ.ஏ. முனாப்)

வடக்கிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து புத்தளம், கற்பிட்டி, பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களில் வாழும் முஸ்லிம் மக்களை வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் பற்றிக் கலந்துரையாடினார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆலங்குடா, கொய்யாவாடி, கல்முனைக்குடி உள்ளிட்ட பள்ளி நிர்வாக சபை உறுப்பினர்கள், விளையாட்டு கழகங்களின் பிரமுகர்கள் ஆகியோரை சந்தித்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் கேட்டறிந்து கொண்டார்.

வீதி மின்விளக்கு புனரமைப்பு, விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கல், வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

## புதிய சம்பள திட்டத்தில் தேசிய பாடசாலை அதிபர்களுக்கு அநீதி

(பலாங்கொடை நிருபர்)

அரசாங்கப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு புதிய சம்பளத்திட்டம் நிறுவப்பட்டு அவற்றுக்கான நிலுவை சம்பளங்கள் மாகாணப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் தேசியப்பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு மாத்திரம் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அப்பாடசாலைகளின் ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மாகாணப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு புதிய சம்பளததிட்டம் நிறுவப்பட்டு அவர்களின் நிலுவைச்சம்பளங்கள் உடனே வழங்கப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டின் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நடைபெற்றுள்ளது, ஆனால் தேசியப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு இவ் ஆண்டில் புதிய சம்பளத்திட்டம் நிறுவப்பட்டுள்ள போதும் நிலுவைச் சம்பளங்கள் இதுவரையில் வழங்கப்படாமை குறித்து ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தேசியப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்குப்பதிலாக மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டுவதன் மர்மம் என்ன என ஆசிரியர்கள் வினவுகின்றனர்.

இதேபோல் பத்து மாதச்சம்பள கடன் வழங்கலும் தேசியப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை என சுட்டிக்காட்டுகின்றனர். உயர்ந்துவிட்ட இன்றைய பொருளாதாரச்சூழ் நிலையில் தேசியப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு மாத்திரம் சலுகைகள் மறுக்கப்பட்டு வருவது கவலைக்குரிய விடயமாகும். நாட்டில் தேசியப்பாடசாலைகள் 335 மாத்திரமே உள்ளன. அதில் சேவையாற்றும் ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கல்வி அமைச்சு நேரடிக் கவனம் செலுத்தி வருகின்றது. எனவே தேசியப் பாடசாலைகளின் ஆசிரியர்களின் சம்பள நிலுவை மற்றும் பத்து மாத கால கடன் ஆகியவற்றை உடனடியாக வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மருதமுனை அல்மதினா வித்தியாலய மாணவர்களான எம்.ஆர். முகம்மத்(181), எம்.என்.அஹ்மட் அஸ்கி(170), எம்.எஸ்.அஹமட் அப்தாப்(167), எம்.ஆர்.அன்சித் அஹமட்(162), எம்.எஸ்.பாத்திமா ஷீபா(161), எம்.எப்.இன்ஸாத் அப்துல்லாஹ்(158), எம்.ஏ.நேஹா ஹாசில்(158), ஏ.அஸ்றிப்(154), எம்.ஆர்.ஜென்னத் றீமா(153), எம்.ஆர்.பாத்திமா றிதா(151)ஆகியோர் அதிபர் ஏ.ஆர். நிஃமத்துல்லா, உதவி அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் எடுத்துக் கொண்ட படம்.

(படம் :- மருதமுனை நிருபர்)

## கந்தளாய் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்




கந்தளாய் பிரதான வீதியிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்னாள் நேற்று பேராறு பகுதியைச் சேர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தாம் பல வருடங்களாக வீச்சு வலை, அத்தாங்கு (பிலிபித்த) போன்றவற்றை பயன்படுத்தி கந்தளாய் குளத்தில் மீன்பிடித்து வந்ததாகவும் தற்போது இவைகளை பயன்படுத்தி மீன் பிடிப்பது தடை என தெரிவிக்கப்பட்டமையினால் மீண்டும் அதனை பெற்றுத்தருமாறு கூறி மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (திருகோணமலை அப்துல்சலாம் யாசீம்)

## கட்டுக்குருந்தை படகு விபத்து; பலி எண்ணிக்கை 14 ஆக உயர்வு

(பீ.எம்.முக்தார்.பேருவளை)

களுத்துறை கட்டுக்குருந்தை படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்வடைந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 11 சடலங்கள் மீட்கப்பட்டன. 21ஆம் திகதி நாகொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் உயிரிழந்தமையால் இறந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆக உயர்வடைந்திருந்தது.

நேற்று மேலும் 2 சடலங்கள் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டன. நேற்று கரையொதுங்கிய சடலம் பேருவளை கரந்தகொடை பகுதியைச் சேர்ந்த ஹெட்டி தந்திரகே டொன் தனுக்ச டில்சானுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அஹன்கல்ல கடற்கரையில் கரையொதுங்கிய சிறுவனின் சடலம் பயாகலை வடுகொட பகுதியைச் சேர்;ந்த கிஹான் தமித் அல்விஸ் உடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும், குறித்த படகு விபத்தில் காணாமல் போயிருந்த சிறுவன், நேற்றைய தினம் பலப்பிட்டிய கடற்பரப்பில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

இதேவேளை கட்டுக்குருந்த படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவருவோருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கப்படவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா கூறியிருந்தார்.

## இரத்தினபுரி வாகன தரிப்பிடத்தை பள்ளிவாசலுக்கு வழங்க நடவடிக்கை

### ஹக்கீமிடம் ஹலீம் உறுதி

(பிறவ்ஸ் முஹம்மட்)

இரத்தினபுரி ஜென்னத் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அருகில் சந்தைத்தொகுதி கட்டப்படும் வாகனத் தரிப்பிடத்தை பொதுமக்கள் பாவனைக்காக பள்ளிவாசலுக்கு பெற்றுத்தருமாறு பள்ளி நிர்வாகம் அமைச்சர் ரவூப் ஹக்கிமிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து, நேற்று புதன் கிழமை (22) பாராளுமன்றத்தில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றது.



இக்கலந்துரையாடலில் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். சல்மான், பள்ளிவாசல் தலைவர் எம்.ஓ.எம். இப்ராஹிம், மு.கா. பதுளை அமைப்பாளர் பி. தாஜுதீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள வாகனத் தரிப்பிடம் நகரசபைக்கு சொந்தமாக இருப்பதால், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவிடமும் முஸ்லிம் சமய, கலாசார திணைக்களத்திடமும் பேசி குறித்த வானகத் தரிப்பிடத்தை பள்ளிவாசலுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் இதன்போது தெரிவித்தார்.

இரத்தினபுரி சந்தை விஸ்தரிப்பு காரணமாக, பள்ளிவாசலுக்கு அருகிலிருந்த வாகனத் தரிப்பிடத்தில் கட்டிடம் அமைப்பதற்கான தூண்கள் 2 வருடங்களுக்கு முன்னர் நடப்பட்டன. இதனால் பள்ளிவாசலுக்கு காற்றோட்டம் இல்லாமலிருப்பதால், அதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு பள்ளிவாசல் நிர்வாகம் ரவூப் ஹக்கீமிடம் கோரிக்கை விடுத்தது. அதன் பின்னர் விஸ்தரிப்பு பணிகள் நிறுத்தப்பட்டன. இந்நிலையிலேயே அந்த வாகனத் தரிப்பிடத்தை மீளப்பெற்றுத் தருமாறு பள்ளிவாசல் நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

## அமெரிக்க தூதுக்குழு ஜனாதிபதியுடன் சந்திப்பு



நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க காங்கிஸ் உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

குடியரசு கட்சியைச் சேர்ந்த பீற்றர் ரொஸ்கம், அட்ரியன் ஸ்மித் மற்றும் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த டேவிட் பிரின்ஸ், ஜெரால்ட் ஈ கொனலி ஆகியோரே ஜனாதிபதியை சந்தித்துள்ளனர். அமெரிக்க மற்றும் இலங்கை பாராளுமன்றங்களுக்கு இடையில் தற்போதுள்ள கூட்டுப் பங்களிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த விஜயம் அமைந்துள்ளது. அத்துடன் ஜனநாயக நிறுவனங்களை பலப்படுத்துதல் மற்றும் இருதரப்பு உறவுகளை மேலும் விஸ்தரித்தல் குறித்தும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. இரண்டு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் பலமான உறவுகள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிழ்ச்சி தெரிவித்துள்ளதோடு, இரு தரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் குறிப்பாக பொருளாதார மற்றும் முதலீட்டு உறவுகளை பலப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். இச்சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அத்துல் கேஷப் மற்றும் அமெரிக்காவிற்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் ஆகியோரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வரட்சியால் 8 இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிப்பு



நாட்டில் 16 மாவட்டங்கள் வரட்சி காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளதால் 2 இலட்சத்து 7876 குடும்பங்களில் 8 இலட்சத்து 18 ஆயிரத்து 935 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

குறித்த 16 மாவட்டங்களிலும் அதிகளவில் பாதிக்கப்பட்ட மாவட்டமாக திருகோணமலை மாவட்டம் முதலிடத்திலுள்ளதோடு, இம் மாவட்டத்தில் 22 ஆயிரத்து 778 குடும்பங்களில் 94 ஆயிரத்து 033 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, வரட்சி காலநிலையில் பாதிக்கப்படாமல் இருந்த கண்டி மாவட்டத்தில் 1497 குடும்பங்களில் 5035 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் சுட்டிக்காட்டியது.

இதேவேளை, வரட்சி காலநிலை காரணமாக பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாமல் போன குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் எனவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கட்டளையை மீறி பயணித்தவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கி சூடு

தெல்தெனிய பகுதியில் பொலிஸாரின் கட்டளையை மீறி மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவர் மீது கடமையிலிருந்த பொலிஸார் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்றுள்ளதோடு, குறித்த துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்த நிலையில் இருவர் சிகிச்சைக்காக தெல்தெனிய மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடமைக்காக சென்ற தெல்தெனிய பொலிஸ் கான்ஸ்டபல் இருவர் மின்சார சபை மாவத்தையில் பயணம் செய்த மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு கட்டளை இட்டபோதிலும் அதற்கு செவி சாய்க்காமல் பயணம் செய்ததால் இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திகனை ரஜவெல்ல கோவில் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட 35 வயதுடைய இந்திக சஞ்ஜீவ, மற்றும் 28 வயதுடைய ருஜிர கயான் ஆகிய இருவருமே துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெல்தெனிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



கொழும்பு அல்.ஹிக்மா கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு நிகழ்வின்போது மறைந்த லேக்ஹவுஸ் புகைப்படக் கலைஞர் ஏ.மதுரைவீரனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது. முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன் அவரது உருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதையும் மேல்மாகாண சபை உறுப்பினர் ஏ.ஜே.எம்.பாயிஸ், புரவலர் ஹாசிம் உமர் மற்றும் பொன்மனச்செல்வி கௌசல்யா தேவி ஆகியோர்கள் அருகில் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

## கடற்படை தளபதியின் பதவிக்காலம் நீடிப்பு

கடற்படை தளபதி வைஸ் எட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவின் பதவிக் காலத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீடித்துள்ளார்.

அந்தவகையில், கடற்படைத் தளபதி நேற்றையதினம் தனது 55 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினார்.

இந்த நிலையில் சேனாதிபதி என்ற வகையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி ஜனாதிபதி கடற்படைத் தளபதியின் பதவிக் காலத்தை நீடித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான ரவீந்திர விஜேகுணரத்ன, 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கை கடற்படையில் இணைந்தார்.

கடற்படை போர் தொடர்பில் சிறப்பு தேர்ச்சிபெற்றுள்ள அவர் சுழியோடியாகவும், பெரஷட் வீரராகவும், விசேட படைப்பிரிவு உறுப்பினராகவும் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.



கடற்படையின் சிறப்பு படகுகள் பிரிவின் ஸ்தாபகரான ரவீந்திர விஜேகுணவரத்ன 2015 ஆம் ஆண்டு இலங்கையின் 20 ஆவது கடற்படைத் தளபதியாக பதவியேற்றுள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

## வித்தியா கொலை வழக்கு

## 11 ஆவது சந்தேகநபர் அரச சாட்சியாளராக மாற்றம்



யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் கொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களில் ஒருவர் அரச தரப்பு சாட்சியாளராக மாறியுள்ளார்.

வழக்கின் 11 ஆம் இலக்க சந்தேகநபரே அரச தரப்பு சாட்சியாளராக மாறியுள்ளதாக ஊர்காவற்துறை நீதவான் ஏ.எம்.எம்.ரியால் நேற்று அறிவித்தார்.

அரச தரப்பு சாட்சியாளராக மாறும் பட்சத்தில் பொது மன்னிப்பு வழங்கப்படும் என சட்ட மாஅதிபர் திணைக்களத்தினூடாக வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய, சந்தேகநபர் அரச தரப்பு சாட்சியாளராவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 12 சந்தேகநபர்களை எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த மாணவி 2015 மே மாதம் 13 ஆம் திகதி வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## டீ.பி.விஜேதுங்கவின் மகள் காலமானார்

மறைந்த முன்னாள் ஜனாதிபதி டீ.பி.விஜேதுங்கவின் ஒரே மகளான சித்ராங்கனி குமாரி விஜேதுங்க (60) நேற்று அதிகாலை காலமானார்.

திடீரென சுகயீனம் ஏற்பட்டு நேற்று முன்தினம் இரவு கண்டி தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டவேளையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சைடம் கல்லூரிக்கு எதிராக வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

சைடம் தனியார் மருத்துவ கல்லூரியை மூடவேண்டும் என வேண்டுகோள் விடுத்து இன்றைய தினம்(23) காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையான காலப்பகுதியில் வைத்திய பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெறவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

வடமத்திய மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலுள்ள அனைத்து அரசு வைத்தியசாலைகளிலும் குறித்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும், குறித்த பணிப்பகிஷ்கரிப்பு போன்று அநுராதபுரம் மற்றும் அம்பாறை நகரங்களிலும் இரண்டு ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.










கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டுக்குருந்தை படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிக் கிரியைகள் நேற்றையதினம் நடைபெற்றது. இதன்போது, பேருவளை முஸ்லிம்கள் தண்ணீர் போத்தல்கள் பகிர்ந்தளிப்பதையும், உயிரிழந்தவர்களுக்காக அனுதாப பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதையும் முஸ்லிம் இளைஞர்களினால் புதை குழிகள் தோண்டப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - பீ.எம்.முக்தார்.பேருவளை)

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
23RD FEBRUARY 2017 - THURSDAY

# பன்முக ஆளுமைகள் கொண்ட கலாநிதி ஏ.எம். எம். சஹாப்தீன்

சமூக சிந்தனையாளரும், மூத்த நிர்வாக அதிகாரியும் தொழில் அதிபருமான கலாநிதி தேசமான்ய ஏ.எம். எம்.சஹாப்தீன் தனது 91ஆவது வயதில் செவ்வாயன்று இறைவனடி எய்தினார்.

கம்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டு கொழும்பில் வாழ்ந்து வந்த கலாநிதி சஹாப்தீன், நாட்டுக்கும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்துக்கும் அளப்பரிய பங்களிப்புச் செய்த ஒரு புத்திஜீவியாவார்.

மத்தியதர குடும்பம் ஒன்றில் பிறந்து, தனது சுய முயற்சியால் கல்வி மூலம் உயர்ந்த இடத்துக்கு வந்து, அதன் பயன்களை தான் சார்ந்த சமூகத்துக்கு பகிர்ந்தளிப்பதில் அளப்பரிய பங்களிப்புச் செய்த ஒருவராக மர்ஹூம் சஹாப்தீனைக் குறிப்பிடலாம்.

ஒன்பது தசாப்தங்கள் வாழ்ந்த கலாநிதி சஹாப்தீன், நோய்வாய்ப்பட்டிருந்த குறுகிய காலம் தவிர்ந்த முழுக்காலத்தினையும் நாட்டுக்கும் குறிப்பாக சமூகத்துக்கும் அர்ப்பணம் செய்த ஒருவராகக் குறிப்பிடலாம்.

1951ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்த அவர், கலாசாரத்துறை உதவி அரசாங்க அதிபராகத் தன் பணியை ஆரம்பித்து, 1973ஆம்ஆண்டு நிர்வாகச் சேவையிலிருந்து ஓய்வு பெறும்வரை பல்வேறு அரச நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகித்து, நிர்வாகத்துறைக்கு சிறப்பான பங்களிப்பினைச் செய்தார்.

இக்கால கட்டத்தில் இவர், ஒலிபரப்பு தொடர்பான ரோயல் ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டார். சோல்பரி பிரிவினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவில் பணிபுரிந்த கலாநிதி சஹாப்தீன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையை உருவாக்குவதற்கான சிபாரிசினை முன்வைப்பதில் பெரும்பங்காற்றினார். இன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை, வளர்ச்சி கண்ட சமூகத்தின் ஊடகமாக இருப்பதற்கான அடிக்கல்லை அவரே நாட்டி வைத்தார்.

1977 – 1998 வரை பல்வேறு அரச நிறுவனங்களில் பணிபுரிந்த இவர், 1990இல் முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பாக ஆராய்ந்த குழுவின் தலைவராகவும் அப்போதைய முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சர் ஏ.எச். எம். அஸ்வரினால் நியமிக்கப்பட்டார். இவரது தலைமையிலான குழு செய்த சிபாரிசுகள் பிற்காலத்தில் அமுல் செய்யப்பட்டிருந்த முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பாக இப்போது உருவாகியிருக்கும் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.

மர்ஹூம் சஹாப்தீன் முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்காக தனது பணத்தை பெருமளவில் செலவு செய்தார். கல்வியில் ஒரு காலத்தில் பின்தங்கியிருந்த குருநாகல் மாவட்டத்தில் குருவிகொடுவையில் சஹாப்தீன் உயர்கல்வி நிறுவனத்தை நிறுவி, நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களுக்கு உயர்கல்வியைப் பெறுவதற்கு வழி சமைத்தார். இக்கல்லூரி மூலம் பல ஆயிரம் முஸ்லிம் பட்டதாரிகள் உருவாகியிருக்கிறார்கள்.

இவரது தலைமையில் இயங்கிய ஏ.எம்.எம். சஹாப்தீன் நம்பிக்கை நிதியம், சர்வதேச ரீதியிலும் உள்நாட்டு ரீதியிலும் மானிட அபிவிருத்திக்காக தாம் சார்ந்த துறைகளில் சாதனை நிகழ்த்தும் அறிஞர்களைக் கௌரவப்படுத்தி முஹம்மத் சஹாப்தீன் சர்வதேச விருதினை வழங்கினார். முஸ்லிம் சமூகம் அறிஞர்களை கௌரவிக்கும் ஒரு சமூகம் என்பதனை அதன் மூலம் உலகுக்கு உணர்த்தினார்.

மர்ஹூம் சஹாப்தீன், தமிழ் இலக்கியத்திலும் தீவிர அக்கறை காட்டினார். இஸ்லாத்தில் சூபித்துவம் பற்றி **'இறைவனும் பிரபஞ்சமும்'** என்ற தலைப்பில் இவர் ஆய்வு நூலொன்றையும் வெளியிட்டு, அத்துறைக்குப் பங்களிப்புச் செய்தார். இதற்காக பேராதனைப் பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கியது.

இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு பெருமையைப் பெற்றுத் தரக் கூடிய வகையில் வாழ்ந்த ஒரு பெரியவராக மர்ஹூம் சஹாப்தீன் திகழ்ந்தார்.

பன்முக ஆளுமைகளைக் கொண்ட மர்ஹூம் அப்துல் மஜீத் முஹம்மது சஹாப்தீனின் மறைவு நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஒரு வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது.

# இலங்கையில் ஓரினச் சேர்க்கைக்கு

## அங்கீகாரமளிப்பது பயங்கரமானது

சிரேஷ்ட பேராசிரியர்,
டபிள்யூ. இந்திரலால் சில்வா
கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞானப் பிரிவு

ஓரினச் சேர்க்கை என்பதன் அர்த்தம் ஒரே பால் உடையவர்கள் இடையிலே அல்லது சிலருடன் இடம்பெறும் பாலியல் தொடர்பாகும். ஓரினச் சேர்க்கை இலங்கையின் ஆதி காலம் முதல் இருந்து வந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறான போதும் இலங்கையின் சட்டப்படி இரு ஆண்களுக்கு திருமணம் செய்து கொள்ள முடியாது. இரு பெண்களுக்கும் அவ்வாறு செய்ய முடியாது. ஆனால் சில ஐரோப்பிய நாடுகளில் அவ்வாறு செய்வதற்கு சட்டத்தில் இடமுண்டு. உதாரணமாக நோர்வே நாட்டை அவ்வாறு குறிப்பிடலாம். அந்த நாட்டுச் சட்டப்படி ஓரினச்சேர்க்கையில் ஈடுபடும் இரு பெண்களோ இரு ஆண்களோ திருமணம் செய்து கொள்ளலாம். ஐக்கிய அமெரிக்காவின் சில பிராந்தியங்களில் இந்தச் சட்டம் உள்ளது. தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக ஓரினச்சேர்க்கையில் இரு பெண்களுக்கு பிள்ளைகளைக் கூட வளர்க்கலாம். நுண் அணுக்கள் உள்ள வங்கிகளில் அவற்றைப் பெற்று அவ்வாறு செய்து கொள்ளலாம். இவ்வாறான நிலைமைகள் சில ஐரோப்பிய நாடுகளில் காணப்படுகின்றன.

ஓரினச்சேர்க்கை தொடர்பாக நாம் நடத்திய ஆய்வுகளிலிருந்து தென்பட்ட விடயம், இலங்கையில் இளைஞர்களில் பெரும்பான்மையினரிடையே ஓரினச் சேர்க்கை பற்றிய சரியான புரிந்துணர்வு இல்லை என்பதாகும். கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் தங்கி இருக்கின்ற விடுதிகளில் இவ்வாறான தொடர்புகள் கூடுதலாக இருப்பதாக அடையாளப்படுத்தலாம். இந்த நாட்டில் ஓரினச் சேர்க்கை பரவலாக இருக்கும் மற்றொரு துறை சுற்றாடல் துறையாகும். குறிப்பாக இந்த நாட்டுக்கு வரும் ஓரினச் சேர்க்கையில் ஆர்வம் உள்ள உல்லாசப் பயணிகளிடையே இந்த நிலமையைக் காணலாம். ஓரினச் சேர்க்கையில் உள்ளார்ந்த சேர்க்கை இடம்பெறாததன் காரணமாக பாலியல் தொடர்பான நோய்கள் ஏற்படுவது குறைவு. அதன் காரணமாக இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவதற்கு முயற்சிக்கிறார்கள். இதன்படி இலங்கையில் ஓரினச்சேர்க்கை ஓரளவு இடம் பெறுகிறது என்று குறிப்பிடலாம். அவ்வாறான போதும் அதுபற்றி குறைந்த புரிந்துணர்வே இருக்கின்றது.



ஓரினச்சேர்க்கையை சட்டமாக்கினால் அவ்வாறானவர்களை திருமணம் செய்து கொள்வதற்கு இடமளிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறானவற்றுக்கு இடமளித்தால் எங்களுடைய சமூக கட்டமைப்பில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட இடமுண்டு. இது தொடர்பாக நாங்கள் நடத்திய ஆய்வில் அதற்காக தாக்கஞ் செலுத்தும் காரணிகள் இருக்கின்றன. ஏனெனில், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் இளைஞர்களுக்கு சீரான திருமண வாழ்க்கையொன்றை முன்னெடுக்க முடியாத நிலையொன்றாகும். ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணுடன் திருமணம் செய்து குழந்தைகளைப் பிறக்க வைத்து நல்ல குடும்ப வாழ்க்கையொன்றை ஏற்படுத்த முடியாது. இல்லையெனில் அதற்கான வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டது.

ஓரினச்சேர்க்கையில் ஈடுபடும் பெண்களுக்கும் இதேநிலைதான். அவ்வாறானவர்கள் திருமணமானாலும் அவர்களுடைய திருமண வாழ்வில் பிரச்சினைகள், மோதல்கள் ஏற்படுவது அவர்கள் தாம் முன்பு செய்த ஓரினச் சேர்க்கை செயற்பாடுகளுக்கு கூடுதலான விருப்பம் தெரிவிப்பதனாலாகும். சமூகத்தில் குடும்பம் என்ற கூட்டுத்தாபனம் மிக முக்கியமானது. நாங்கள் அண்மையில் சமூகசேவை திணைக்களத்தோடு இணைந்து குடும்பக் கொள்கை ஒன்றை வகுத்தோம். அதன் மூலம் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கும் மற்றும் பலப்படுத்துவதற்குமான பல கொள்கைகளைச் சமர்ப்பிக்க முடிந்தது. குடும்பம் பாதுகாக்கப்பட்டால் மட்டுமே நாட்டை முன்னேற்ற முடியும் என்பதால் குடும்பத் தொடர்புகளைத் தாண்டி ஓரினச்சேர்க்கைத் தொடர்பு முதன்மையடைந்தால் குடும்பக் கூட்டுத்தாபனம் பாதுகாக்கப்பட மாட்டாது. பெண்ணும் ஆணும் திருமணம் செய்து சேர்க்கையில் ஈடுபட்டு பிள்ளைகளை உருவாக்கி அந்தப் பிள்ளைகளை போசிப்பதன் மூலம் குடும்ப செயற்பாடுகளில் பலத்த தாக்கம் ஏற்படக்கூடும். நாட்டில் பிள்ளைகளை உருவாக்கக் கூடிய போக்கு குறித்து பிரச்சினைகளை ஏற்படுத்த அந்த நிலைமை உதவலாம். ஓரினச்சேர்க்கை

சட்டமாக்கப்பட்டுள்ள சில நாடுகளில் இந்த நிலைமை பிரச்சினையாகாமைக்குக் காரணம், அந்த நாடுகளுக்கு வேறு நாடுகளிலிருந்து இளைஞர், யுவதிகளை வரவழைத்து பிள்ளைகளை உருவாக்குவதாகும். எனவே சனத்தொகை பற்றிய எண்ணிக்கை அவர்களுக்கு பிரச்சினை இல்லை. ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் அதே போன்று வெளிநாடுகளில் இளைஞர்கள் வந்து தங்கி இருந்து வாழ்வது இடம்பெறுவதில்லை. ஆனால், இலங்கையில் அவ்வாறு வெளிநாடுகளிலிருந்து இளைஞர்கள் வந்து வசிப்பதில்லை. எனவே ஓரினச்சேர்க்கையைச் சட்டமாக்கினால், அவ்வாறான திருமணங்களுக்கு வாய்ப்பளித்தால், ஏற்படக் கூடிய ஒன்று நாட்டில் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்படுவதாகும். மறுபக்கத்தில் குடும்பக் கூட்டுத்தாபனத்தில் பாரதூரமான பிரச்சினைகள் இடம்பெற வாய்ப்புண்டு. ஓரினச்சேர்க்கை பற்றி அறியாதவர்கள் இதன் மூலம் அதுபற்றி அறிந்து கொண்டு அதில் ஈடுபட இடமுண்டு. எங்களுடைய நாட்டில் விபசாரத் தொழில் மற்றும் ஓரினச்சேர்க்கை சட்டமாக்கப்படவில்லை. எனவே அவை செயற்பாட்டில் இல்லை. அவற்றுக்கு சட்டரீதியான அங்கிகாரம் வழங்கினால், அதில் ஈடுபடும் எண்ணிக்கை அதிகரித்து, குடும்ப கூட்டுத்தாபனத்திற்கு நெருக்கடிகள் அதிகரிக்கும். குடும்ப பாதுகாப்பு, சிறுவர் பாதுகாப்பு இது போன்ற விடயங்களில் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்பட இடமுண்டு. கலாசார ரீதியாக அதற்கு எவ்வித அனுகூலமும் ஒருபோதும் கிடைக்க மாட்டாது. வேறொரு கலாசாரத்தின் அம்சங்களை எங்களைப் போன்ற ஒரு நாட்டில் செய்வதற்குத் தயாரானால், அது தொடர்பாக ஒரு பாரிய கலந்துரையாடல் நடத்தப்பட்டு அதன் தகுதி, தகுதியின்மை பற்றி பரிசீலிக்கப்பட வேண்டும். ஓரினச் சேர்க்கை பற்றி மேலும் பேசுவதாக இருந்தால், அதன் மற்றொரு பிரிவு பற்றியும் எமது கவனம் செலுத்தப்பட வேண்டும். அதாவது ஒரு பெண்ணும் ஆணும் குடும்ப வாழ்கை நடத்தும் போது அக்கணவர் வேறொரு ஆணுடன் தொடர்பு கொள்ளும் நிலைமை. அவ்வாறான தொடர்பு காரணமாக பாலியல் நோய்கள் ஏற்பட இடமுண்டு. ஏனெனில், அக்கணவர் மனைவியோடு மேற்கொள்ளும் பாலியல் தொடர்புக்கு மேலதிகமாக மற்றொரு ஆணுடன் ஓரினச்சேர்க்கை செய்வதனாலாகும். எனது தனிப்பட்ட கருத்துபடி சுகாதார குடும்பத் தொடர்பு மற்றும் பொருளாதாரத் துறைகள் தொடர்பாக கவனத்திற் கெடுத்தால் ஓரினச்சேர்க்கை இலங்கையைப் பொறுத்த வரையில் அவ்வளவு பொருத்தமானதல்ல. எங்களுடைய சமூகத்தில் அது இடம் பெறுவதாகத் தெரிந்திருந்த போதும் அது பற்றி பேசுவது இல்லை. இது தொடர்பாக சட்ட ரீதியாக அங்கிகாரத்தை வழங்குவதன் மூலம் நாம் மேற்குறிப்பிட்ட மறைத்து வைத்திருக்கும் போக்கு மேலும் கூடலாம். அந்த வளர்ச்சியின் ஒரு கட்டமாக ஓரினச்சேர்க்கையை மேற்கொள்ளும் சேவை நிலையங்களும் ஏற்படலாம். இலங்கையில் விபசாரத் தொழில் சட்ட ரீதியாக அங்கிகரிக்கப்படாததினால் விபசார நிலையங்கள் பகிரங்கமாக இயங்குவதில்லை. விபசாரத்தை சட்டமாக்கியுள்ள தாய்லாந்து போன்ற நாடுகளில் அவ்வாறான சேவைகளை வழங்கும் நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான பின்னணியில் ஓரினச்சேர்க்கை சட்டமாக்கப்பட்டால் இன்றாகும் போது அடிக்கடி காணக் கூடிய ஸ்பா நிலையங்கள் போன்று ஓரினச்சேர்க்கை நிலையங்களும் இடம்பெற இடமுண்டு. அத்தோடு, இவை தொடர்பாக பேஸ் புக் போன்ற சமூக ஊடகங்களிலும் தகவல்கள் பரிமாறப்பட இடமுண்டு. கருச் சிதைவு செய்வது இலங்கையில் சட்டமாக்கப்படாது இருப்பதனால் எவருக்கும் அது தொடர்பாக சமூக ஊடகங்கள் மற்றும் வெப்தளங்கள் மூலம் பிரசாரம் செய்ய முடியாது. அது சட்ட விரோதமானதால் அது தொடர்பானவர்களை கைது செய்யக்கூடிய நிலைமை இருக்கின்றது. அதன்படி அப்படிப்பட்டவர்களை கைது செய்ய வாய்ப்புண்டு. எனவே ஓரினச்சேர்க்கையைச்

சட்டமாக்கினால் அது தொடர்பாக பெருமளவில் பிரசாரம் செய்யப்பட்டு, இளைஞர்கள் பெருமளவில் அதில் ஈடுபட இடமுண்டு.

இங்கு காணக் கூடிய மற்றொரு பக்கமும் உண்டு. அதாவது யுவதிகளை விட இளைஞர்கள் கூடுதலாக ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவதாகும். அதற்குக் காரணம் குடும்பக் கூட்டுத்தாபனத்தில் யுவதிக்கு (மகளுக்கு) கிடைக்கும் பாதுகாப்பு இளைஞர்களுக்கு (மகனுக்கு) கிடைப்பதில்லை. குறிப்பாக பருவமடையும் மகள், பாதுகாக்கப்பட வேண்டிய முறை குறித்து தாய்த்தரப்பிலிருந்து ஆலோசனைகள் கிடைப்பது போன்று ஆண் பிள்ளைகளைப் பொறுத்த வரையில் அவ்வாறான நிலை இல்லை. இந்தப் பின்னணியில் வயது வந்த ஆண்கள், ஆண் பிள்ளைகளை ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுத்துகிறார்கள். அவ்வாறான பழக்கத்தில் ஈடுபடுகின்ற வயது வந்த ஆண், பெண்ணோடு திருமணம் செய்தாலும் ஓரினச்சேர்கையை மீண்டும் நினைவுபடுத்தி அதில் ஈடுபட முடியும்.

இலங்கை சட்டப்படி திருமணமாகி இருக்கும் ஒருவர், பாலியல் தொடர்பு மூலம் ஒருவரை மற்றவர் இம்சைப்படுத்தும் வகையில் நடந்து கொண்டால் அல்லது பாலியல் உறவு கொண்டால் கிடைக்கும் பிள்ளைக்கருவின் பொறுப்பை நிராகரித்தால் (அநேகமாக ஆணினால்) அவ்வாறான பிரச்சினைகள் சட்டத்தின் முன் வரப்படுகின்றன. அவை பற்றிய பல்வேறு தகவல்கள் எங்களுக்கு வருகின்றன. எவ்வாறான போதும் ஓரினச்சேர்க்கை தொடர்பாக அவ்வாறான பிரச்சினைகள் சட்டத்தின் முன் வருவது மிகக் குறைவாகும். சில சந்தர்ப்பங்களில் வருவதே இல்லை. ஓரினச்சேர்க்கையை எமது சமூகம் பேசாத விடயமாக மறைத்து வைத்திருப்பதும் அதற்கொரு காரணமாகும். எவ்வாறான போதும் சிறிய ஆண்பிள்ளைகளை இதற்காகப் பயன்படுத்துவதற்கான தகவல்கள் கிடைத்தால் அதனை சட்டத்தின் முன் நிறுத்தலாம். ஏனெனில் சிறுவர்களை ஏமாற்றி இதனைச் செய்வதினாலாகும். அவ்வாறு சிறுவர்களை ஏமாற்றி மேற்கொள்ளப்பட்ட ஓரினச்சேர்க்கை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருப்பதை நாங்கள் அறிவோம். இது சட்டமாக்கப்பட்டால் சில உல்லாசப் பயணிகள் அவற்றை அடையும் நோக்கில் இலங்கை வரலாம்.

ஓரினச்சேர்க்கை இலங்கை சமூகத்தில் பேசப்படாத ஒரு விடயமாக இருப்பதனால் அது தொடர்பாக ஆய்வுகள் நடத்துவது கஷ்டமானது. எவ்வாறான போதும் இலங்கையில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவோரது விகிதாசாரம் குறைந்தளவிலே உள்ளது. அதிலும் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது 20-30 சதவீதமானவர்கள் இளைஞர் சமுகத்தைச் சேர்ந்தவர்களாகும். இந்த அடிப்படையில் இலங்கையில் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவோரது விகிதாசாரம் குறைவதற்கு ஒரு காரணம் இந்த இளைஞர்களிடையே காதல் தொடர்பு பரவலாக இருப்பதாகும். அவ்வாறான தொடர்புகள் இருப்பதன் காரணமாக ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவது மட்டுப்படுத்தப்படுகின்றது. எங்களுடைய நாட்டில் திருமணம் செய்வோரில் அநேகர் காதல் திருமணங்களைச் செய்கிறார்கள். எனவே இந்த நிலைமையை மாற்றுவதற்கு யாராவது செயற்படுவார்களானால் அதனால் ஏற்படப் போகும் தாக்கம் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும். இத்துறை தொடர்பான நிபுணர்களது கருத்தை அறிந்து தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பொருத்தமான முடிவுகளை எடுக்கவேண்டும். ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது குறித்து மரபணுக்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா என்பது பற்றி ஆராய்ச்சி மூலம் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படவில்லை. எவ்வாறான போதும் சில ஆண்கள் பெண்களோடு பாலியல் தொடர்பு கொள்வதற்கு அச்சம் கொள்வதன் உண்மை, ஆண்களுக்கு அதற்காக நல்ல உடற்பலமும் மானசீக சக்தியும் இருக்க வேண்டும். அவ்வாறான ஆற்றல்கள் இல்லாத ஆண்கள் திருமணம் முடிப்பதற்கு அச்சப்படுகிறார்கள். அவ்வாறான பெண்களும் இருக்கிறார்கள். அவர்கள் அநேக சந்தர்ப்பங்களில் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட இடமுண்டு.

# ஒருமித்த மனநிலை, திடமான இலட்சியத்துடன் சேவை புரிந்தால் சாதனைகள் படைக்கலாம்

## மாகாண கல்விப் பணிப்பாளர் நிஸாம்

(ஏ.எல்.எம். சலீம்)

ஒரு பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் ஒருமித்த மனநிலையுடனும் மாணவர்கள் முன்னேற்றம் தொடர்பான நோக்கில் திடமான இலட்சிய வேட்கையுடனும் சேவை புரிந்தால் சாதனைகள் படைக்கலாம் என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி. அப்துல் நிஸாம் கூறினார்.

இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண்கள் மகா வித்தியாலயம் என முத்திரை பதித்த நிந்தவூர் அல் - மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள ஹாஜியானி என்.யூ.எச். எம். சித்தீக்கிற்கு பாடசாலை சமூகம் நடத்திய பிரியாவிடை கௌரவிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலையின் புதிய அதிபர் ஏ.எல். நிசாமுடீன் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்ற இப்பெருவிழா நிகழ்வில் கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். அப்துல் ஜலீல் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஓய்வுபெற்ற அதிபர் ஹாஜியானி சித்தீக்கின் அளப்பரிய சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக நிகழ்வில் முத்தாரம் எனும் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மேலும் கூறியதாவது,

எமது மாணவர்களிடம் சாதிக்கக்கூடிய வல்லமைகள் நிறையவே உண்டு. இதனை தட்டியெழுப்பி ஊக்குவித்து சாதனைகள் படைக்க வைக்கும் நோக்குடன் அதிபர், ஆசிரியர்களின் சேவைகள் அமைய வேண்டும்.

இந்த ஒருமித்த மனநிலையுடனான சேவைகளுள், மாணவர் ஊக்கமும் பாடசாலையின் சாதனைகளை உச்ச நிலைக்கே இட்டுச் செல்ல முடியும்.

இந்த வகையில் இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண்கள் மகா வித்தியாலயம் என்ற முத்திரையுடன் திகழும் இப்பாடசாலை மிக விரைவாக இலங்கை அடையக்கூடிய உண்மை நிலையுடன் திகழ்வது கண்டு நாம் பெருமிதமடைகின்றோம்.

இந்த வெற்றிப்பாதையை நோக்கிய பயணம், சிறந்த ஆயத்தங்களுடன் ஆரம்பமாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிழக்கில் மட்டுமன்றி இலங்கை முழுவதுமுள்ள கல்விப் புலம் மற்றும் கவனம் கொள்ளும் வகையிலான சாதனைகளை இப்பாடசாலை மாணவியர்கள் சாதிக்கத்தக்க வல்லமை கொண்டவர்கள் என்பதை எதிர்காலம் நிரூபிக்கும் என்ற நம்பிக்கை மேலோங்குகின்றது.

இதற்கான சவால்களை ஏற்று இலக்குகளை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சமூகத்தில் பெண்கள் கல்வி பெறுவது மிக அவசியமாகும். ஒரு பெண் கல்வி பெறும்போது ஒரு சமூகமே




கல்வி பெறுவதாக அமைகின்றது.

இந்த அடிப்படையில் நிந்தவூரில் பெண்களின் கல்வி மற்றும் ஒழுக்க விழுமியங்கள் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமென்பதற்கான அடித்தளம் இப்பாடசாலையில் இடப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்றுள்ள அதிபர் ஹாஜியானி சித்தீக்கின் கல்விப் பணியும். இப்பாடசாலையின் வளர்ச்சியில் அவர் காட்டிவந்த பெரும் அக்கறையையும் எளிதில் மறந்து விட முடியாது.

இப்பாடசாலையைக் கிழக்கு மாகாணத்தில் பேசப்படும் பாடசாலைகளில் ஒன்றாக கட்டிக்காத்த பெருமைக் குரியவராக அவர் திகழ்கின்றார்.

இவரது காலத்தில் இப்பாடசாலை கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி புறக்கிருத்திய செயற்பாடுகளிலும்

சாதனைகளைப் படைத்துள்ளது அவரது சேவைகள் மதிக்கப்பட்டுள்ளன

மிகுந்த மனஉறுதி கொண்ட இவர் தாம் எடுத்துக் கொண்ட விடயங்களை வெற்றி கொள்வதற்கு எந்த சவால்களையும் எதிர்கொள்ளத் தயங்கவில்லையென்பதை பல சந்தர்ப்பங்களில் அவதானித்துள்ளோம்.

மேலும் இப்பாடசாலை அவரது இலக்கு நோக்கி புதிய அதிபர் நிசாமுடீன் தலைமையிலான பிரதி அதிபர்கள், ஆசிரிய குழாத்தின் சிறப்பான சேவையுடன் வீறுநடை போடுமென்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமுண்டு என்றார்.

வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். அப்துல் ஜலீல், ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் மைமூன் செயினுலாப்தீன், விழாக்குழுத் தலைவர் எம். சஹாப்தீன், பாடசாலை அபிவிருத்தி சபைச் செயலாளர் எம்.ரி.எம். தாஜுதீன் உட்பட மேலும் பலரும் உரையாற்றினர்.

# பேஸ்புக் அவதூறுக்கெதிராக கோறளைப்பற்று பிரதேச சபை ஊழியர்கள் போராட்டம்




(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு வாழைச்சேனை - கோறளைப்பற்று பிரதேச சபை பற்றி பேஸ்புக்கில் பரப்பப்படும் அவதூறுக்கு எதிராக கோறளைப்பற்று பிரதேச செயலக ஊழியர்கள் 200 பேர் நேற்று வீதியில் இறங்கி போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.தமது பிரதேச சபைச் செயலாளரின் நடவடிக்கைகளையும் அங்கு கடமை புரியும் ஊழியர்களின் செயற்பாடுகளையும் அவதூறான முறையில் விமர்சித்து பேஸ்புக் மூலம் குழப்பங்களை ஏற்படுத்தும் நபரைக் கைது செய்ய வேண்டும் என ஊழியர்கள் கோரி நின்றனர்.

கோறளைப்பற்று பிரதேச சபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் தின் இறுதியில் சம்பந்தப்பட்ட நபரைக் கைது செய்யுமாறு கோரி வாழைச் சேனை பொலிஸாரிடம் கோரிக்கை மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது. அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

இச்சபையின் 195 ஆளணியின் 137 தமிழர்களும் 53 முஸ்லிம்களும் பணிபுரிகின்றோம். எம்மிடையே சகோதரத்துவத்தை வளர்த்து இரண்டு சமூகங்களைச் சேர்ந்தோரையும் கடந்த 5 வருடங்களாக எமது செயலாளர் கட்டிக் காத்து வருகின்றார். அவர் சபையின் செயலாளர் என்ற வகையில் 5000 ரூபாவிற்கு குறையாத மேலதிக படியினையும் தொலைபேசி க்கட்டணமாக 2000 ரூபாவும் ஒவ்வொரு மாதமும் பெறமுடியும்.

அத்துடன் கொழும்பு, மட்டக் களப்பு, திருகோணமலை போன்ற இடங்களுக்கான பிரயாணக் கொடுப்பன வுகளையும் பெற அனுமதியுண்டு. ஆனால் அவற்றை அவர் இன்று வரை பெற்றுக் கொண்டதே இல்லை. கடந்த 05 வருடங்களில் நூற்றுக்கணக்கான கிராம மட்ட சங்கங்களும், ஒப்பந்தகாரர்களும் இப்பிரதேச சபையில் ஒப்பந்த வேலைகளை பெற்றுள்ளனர். இவ்வொப்பந்தகாரர்களும், பிரதேச சபையினால் நாளாந்தம் நன்மை பெறுவோரும் எமது செயலாளரின் கறை படியாத கரங்களின் நாணயத்தை உறுதி செய்ய தயாராகவுள்ளனர்.

இந்நிலையில் சில நயவஞ்சகர் கள் திரை மறைவில் இச்சபைக்கும், எமது செயலாளருக்கும் எமது உத்தியோ கத்தர்களுக்கும் கௌரவ முதலமைச்சர் உட்பட அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்த முனைகின்றனர். கடந்த 05 வருடங்கள் இப்பிரதேச சபையின் செயலாளராக பணியிலிருக்கும் எஸ். எம். சிஹாப்தீனுக்கெதிரான ஒரு சிறு துரும்பையும் குற்றச் சாட்டாக கொண்டு வர முடியாது என்பதற்குச் சாட்சியம் பகர்கின்றோம்.

இச்சபையின் வளர்ச்சிக்கு பங்காற்ற நாங்கள் இன மத மொழி வேறுபாடின்றி ஒற்றுமையுடன் ஓரணியில் திரண்டு உறுதி யுடன் நிற்கின்றோம் என்பதை இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மூலம் பிரகடனம் செய்கின்றோம்.

# சம்பள நிலுவையை வழங்கக்கோரி கல்முனையில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் சம்பள நிலுவையை உடனடியாக வழங்கக் கோரி நேற்று கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இலங்கை மகா ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஏ.எம். அஹுவர் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த ஆசிரியர்கள் பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர். அத்துடன் ஆசிரியர்கள் பலர் ஒலிபெருக்கி மூலம் கல்வித் திணைக்கள அதிகாரிகளை வன்மையாக கண்டித்து, மிகவும் காட்டமான கருத்துக்களை வெளியிட்டு உரையாற்றினர்.

தமக்குரிய சம்பள நிலுவையை மேலும் இழுத்தடித்து, காலம் தாழ்த்தாமல் அதனை வழங்குவதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் இதன்போது கோரிக்கை விடுத்தனர். சுமார் ஒரு மணித்தியாலம் இந்த ஆர்ப்பாட்டம் நீடித்தது. அங்கு இலங்கை மகா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஏ.எம். அஹுவர் கருத்து தெரிவிக்கையில், கல்முனை வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் சுமார் 1200 ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவை நீண்ட காலமாக இழுத்தடிப்பு செய்யப்படுகிறது. இதனால் ஏமாற்றமும் விரக்தியுமடைந்துள்ள குறித்த ஆசிரியர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

உரிய வேளையில் தரவுகளை அனுப்பாமல் இருந்த வலயக் கல்வி அதிகாரிகளின் அசமந்தப்போக்கே உரிய காலப்பகுதிக்குள் சம்பள நிலுவைக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படாமைக்கு காரணம் என மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகளினால் சுட்டிக் காட்டப்படுகிறது.

இது விடயமாக வலயக் கல்விப் பணிப்பாளர் தொடக்கம் மாகாண ஆளுநர் வரை பல்வேறு உயர் அதிகாரிகளிடம் எமது கோரிக்கையை வலியுறுத்தி, பல்வேறு முயற்சிகளை எமது ச ங்கம் மேற்கொண்டுள்ள போதிலும் இன்னும் அதனை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

கிழக்கு மாகாணத்தில் கல்முனை வலயத்தில் மாத்திரம் சம்பள நிலுவை இழுத்தடிக்கப்படுவதன் மர்மம் என்ன? இங்கு கடமையாற்றிய கணக்காளரை இடமாற்றியது எமது சம்பள நிலுவைக்கு ஆப்பு வைப்பதற்குத்தானா? இந்த வலயக் கல்விப் பணிமனையின் செயற்பாடுகள் நல்லாட்சிக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளன. மாகாணக் கல்விப் பணிப்பாளர் எமக்கு அளித்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. ஆகையினால் எமது கோரிக்கையின்படி அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டே இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளோம். எமது ஆசிரியர்களை தொடர்ந்தும் ஏமாற்ற முற்பட்டால், எமது இந்த போராட்டம் பல்வேறு வடிவங்களாக மாற்றமடையும் என்பதை அதிகாரிகளுக்கு எச்சரிக்கையாக சொல்லி வைக்கின்றோம் என்றார்.

# வெளிநாடு செல்வோரின் பிள்ளைகளே மனநிலை பாதிப்புக்குள்ளாகின்றனர்

(குருநாகல் இக்பால் அலி)

மனநோயாளர் பிரிவுக்கு மனநோயாளர்களாக வருகை தருவோரில் நூற்றுக்கு 47 விகிதமானவர்கள் வெளிநாட்டுக்குச் செல்லும் பெற்றோர்களின் பிள்ளைகளாக இருப்பதாக நிகவெரடிய தள வைத்தியசாலையின் மனநோயாளர் பிரிவு தெரிவிக்கின்றது.

மனநோய்க்குட்பட்டு வைத்தியசாலையில் மன நோயாளர் பிரிவில் சிறார்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அந்த வகையில் தள வைத்தியசாலையில் 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இவ்வருடம் 2017 ஜனவரி மாதம் வரையில் நான்கு மாதத்தில் 36 பிள்ளைகள் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த சிகிச்சைப் பிரிவின் பிரதான மனவள வைத்திய நிபுணர் சயுரி மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்தச் சிறுவர்களின் பெற்றோர்கள் நூற்றுக்கு 47 விகிதமானவர்கள் வெளிநாடு சென்றவர்களின் பிள்ளைகள் என தெரியவந்துள்ளது.

பெற்றோர்களின் அரவணைப்பு, அன்பு கிடைக்காமையினால் சிறார்கள் மன நோய்க்குட்பட்டுள்ளனர். இதனால் சிறார்கள் சட்ட விரோத செயற்பாடுகளிலும் சமூக விரோத செயற்பாடுகளிலும் ஈடுபாடுடையவர்களாக உள்ளனர். வெளிநாடு சென்றுள்ள பெற்றோர்களுடைய பிள்ளைகள் பிறிதொரு உறவினரின் வீட்டில் பராமரிக்கப்படுபவர்களினால் துன்புறுத்தப்பட்டு மன நிலை பாதிப்புக்குள்ளாகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.





அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மேல் மாகாண சபை உறுப்பினர் மொஹமட் பாயிஸின் நிதியொதுக்கீட்டில் பள்ளிவாசல்கள், பௌத்த ஆலயங்கள், கிறிஸ்தவ, இந்து கோயில்களுக்கு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு முகத்துவாரம் ஆனந்தா கல்லூரியில் இடம்பெற்றதுஇந்நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் றிஷாட் பதியுதீன் கலந்து கொண்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் மற்றும் மதகுருக்களும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

**மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை**

உண்மையான உறுதியான மஹர் அடிப் படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர் M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.) T.P: 077 2810009. WhatsApp: 077 9697790 Email - nrahmathullah786@yahoo.com






# குதிகால் வலி ஏன் ஏற்படுகிறது?

குதி கால் வலி ஒரு காலில் மட்டுமல்ல இரண்டு கால்களிலும் வரலாம்

ஒருவர் எழுந்து நடக்க ஆரம்பிக்கும் போது குதிகாலில் வலி ஏற்பட்டால் அதனை குதிகால் வாதம் என்று கூறுவதுண்டு. இவ்வாறு பாதிக்கப்பட்ட நோயாளிகளின் காலில் சிறிது வீக்கம் இருக்கும். இதில் நோயாளி அணிந்திருக்கும் செருப்பு முக்கியமானது.

அதிக உயரமுள்ள காலணிகள், இறுக்கமான காலணிகள் போன்றவை இதற்குக் காரணமாகலாம். சமீபத்தில் காலணியை மாற்றியதால் இப்படி ஏற்பட்டிருக்கலாம்.

இதற்கு ஒருவருடைய தொழில் என்னவென்று பார்க்க வேண்டும். அவர் ஓடியாடி வேலை செய்பவரா? என்று தெரிய வேண்டும். நோயாளிக்கு கீ கால் வாயுவோ, முடக்கு வாதமோ, வாத ரக்த நோயோ உள்ளதா என்று பார்க்க வேண்டும். கணுக்காலின் பின்பகுதியில் வீக்கமும், சிவப்புத் தன்மையும் காணப்படும். தொட்டால் சற்றுச் சூடாக இருக்கும், இவ்வாறிருந்தால் வலி இருப்பதாகச் சொல்வார்கள். தசைநார் கிழிந்துள்ளதா என்று பரிசோதிக்க வேண்டும். இதற்கு என்று தனியாகப் பரிசோதனை உள்ளது.

குதிகால் வலிக்குக் கைமருந்து:

சிற்றரத்தை, அமுக்குரா, சுக்கு ஆகிய வற்றைப் பொடித்துப் பாலில் போட்டுச் சாப்பிட்டு வர வேண்டும். முடக்கறுத்தான், பிரண்டைத் துவையல் நல்லது முடக்கறுத்தான் ரசம் மிகவும் நல்லது.


உடல் எடை அதிகமாக உள்ளவர்கள் கொள்ளு, காராமணி, கம்பு, மொச்சை, பயறு, குப்பைக் கீரை போன்றவற்றை உட்கொள்ள வேண்டும்.தவிடு, உப்பு ஒத்தடம் கொடுத்து வரலாம். மிதமான வெந்நீரில் உப்பு போட்டுக் காலை முக்கி வைக்கலாம். வில்வக்காயைச் சுட்டு நசுக்கி, எருக்கிலை பழுப்பை அதன் மேல் விட்டுக் குதிகாலில் ஒத்தடம் கொடுக்கலாம். இவ்வாறு செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

## செல் சிதைவை தடுக்கும் வெள்ளரி

வெள்ளரிக்காய் மற்றும் எலுமிச்சை இலையை பொடியாக நறுக்கிக் கொள்ளுங்கள். சீரகத்தை வறுத்து 2 தேக்கரண்டி அளவு பொடித்துக் கொள்ளுங்கள். இந்த கலவைகளை போட்டு இவற்றுடன் இளநீரை ஊற்றி அரை மணி நேரம் வைத்து அதன்பின் பருகவும்.

வெள்ளரிக்காயில் அதிக அளவில் சிலிகா உள்ளதால், தசை இணைப்புகளை திடமாக்கி மூட்டு ஆரோக்கியத்துக்கு துணையாக நிற்கும். அதிலும் இதனை கரட் சாற்றுடன் சேர்த்து பருகும் போது, உடலில் யூரிக் அமிலத்தின் அளவு குறைவதால் கீல்வாதத்திற்கும் நிவாரணம் கிடைக்கும்.

# மருந்தாகும் பப்பாளி இலை



ஃபைட்டோ நியூண்ட்ரியண்டுகளும், என்சைம் போன்ற நிறமிகளும், கால்சியம், பொட்டாசியம், சோடியம், மெக்னீசியம் மற்றும் இரும்பு போன்ற கனிமச் சத்துக்களும் அதிகமாக உள்ளன. எனவே பப்பாளி இலையில் ஜூஸ் செய்துக் குடித்து வந்தால், ஏராளமான நன்மைகளை நாம் பெறலாம். நமது உடம்பில் ஓடும் இரத்தத்தில், இரத்தத் தட்டுகள் குறைந்தால், அது பல்வேறு நோய்களை ஏற்படுத்தும். இதனால் பப்பாளி இலை ஜூஸ் குடித்து வந்தால், இரத்த செல்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யலாம்.

பப்பாளி இலையின் சாறு நமது உடம்பில் உள்ள கல்லீரலின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, மஞ்சள் காமாலை, கல்லீரல் புற்றுநோய் போன்ற பிரச்சனைகள் ஏற்படாமல் தடுக்கிறது.

★★★

# நலம் தரும் நாயுருவி

சளி, இருமல், மாதவிலக்கு பிரச்சினைகளை தீர்க்கும் நாயுருவி குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் காணலாம். பல்வேறு நோய்களை போக்க கூடியது நாயுருவி. இதன் விதைகள் ஆடையோடு ஒட்டிக்கொள்ளும் தன்மை உடையது.

பல்வேறு நன்மைகளை கொண்ட நாயுருவி வயிற்று கடுப்பை போக்குகிறது. வயிற்று போக்கை கட்டுப்படுத்துகிறது. செரிமானத்தை தூண்டக் கூடியது. பாம்புக் கடி, தேள் கடிக்கு மேல்பூச்சாக விளங்குகிறது. நாயுருவி ஆரோக்கியத்தை தருவதாக அமைவதோடு சிறுநீர் தாரையில் ஏற்படும் கற்கள், கருப்பை கட்டி, நெறிக் கட்டியை கரைக்கும் தன்மை உடையது. கடும் விஷம்கூட முறியும்.

அற்புதமான மருத்துவ குணங்களை கொண்ட நாயுருவியை பயன்படுத்தி நலம் பெறலாம். வெளி மூலம் இருப்பவர்களுக்கு ஏற்படும் அரிப்பு, இரத்த கசிவுக்கான மருத்துவம் குறித்து பார்க்கலாம். இப்பிரச்சினைகளுக்கு நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் நாவல் பட்டை சூரணம் மருந்தாகிறது. நாவல்பட்டை சூரணத்துடன் எண்ணெய் சேர்த்து பசையாக்கி மேல்பற்றாக போடும் போது இரத்த மூலம், வெளி மூலத்தால் ஏற்படும் பிரச்சினைகள் சரியாகும்.



## மருத்துவ குறிப்புகள்

நல்லெண்ணையில் தும்பை பூவை போட்டு காய்ச்சி தலையில் தேய்த்து குளித்து வர தலைப்பாரம் குறையும்.

இஞ்சியை இடித்துச் சாறு எடுத்து சூடாக்கி தலையில் நெற்றியில் பற்று போட குணமாகும்.

ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறுதுண்டு சுக்கு 2 இலவங்கம் சேர்த்து மைபோல அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.

ஒரு கரண்டியில் நெருப்புத் தணலை எடுத்து அதன் மீது சிறிது சாம்பிராணி, மஞ்சள் தூள் ஆகியவைகளை போட்டுப் புகை வரவழைத்து, அந்தப்புகையை மூக்கினால் உள்ளிழுத்தால் சளித் தொல்லை நீங்கும்.

# நீரிழிவுக்கு மேற்கத்தேய மருந்துகளா?

நீரிழிவு நோயில் மேற்கத்திய மருந்துவகைகளை பாவிக்கும் போது அதனால் ஏற்படும் பக்க விளைவுகளைப் போக்கக் கூடிய சித்தாயுர்வேத மருந்து வகைகளை அறிந்து கொள்வதும் அவசியமாகும். இம் மருந்துகள் உடலில் எவ்வித கெடுதல்களையும் உண்டு பண்ணாமல் அன்றாட உணவுகள் போன்று செயற்படும். அவை உடலில் உண்டாகும் தேவையற்ற கழிவுப் பொருட்களை மலம், சிறுநீர் வழியாக வெளியேற்ற உதவுவதோடு மேலும் உடலுக்குத் தேவையான விஷேடமான செயற்பாட்டில் பங்கு வகிக்கக் கூடியவை.



உதாரணமாக கடுக்காயும் தாயும் ஒன்றேயாயினும் கடுக்காய் தாயைவிட சிறந்தது. காரணம் தாய் அறுசுவை உணவூட்டித்தான் பிள்ளையை வளர்ப்பாள். ஆனால் கடுக்காயோ உடலை நோய்வராமல் போஷித்து ஆரோக்கியமாக வைத்திருக்கும். என்பதே மருத்துவக்கருத்தாகும். ஏறத்தாழ ஐந்தாயிரம் வருடங்களுக்கு முன்பே தற்காலத்தில், நீரிழிவு எனும் நோயை, மதுமேகம் என்று சித்தர்கள் குறிப்பிட்டு அதற்கான முற்காப்பு முறைகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

வாரம் இரு முறை தைலஸ் நானம் (எண்ணெய்தேய்த்துக் குளித்தல்), மாதம் இருமுறை மங்கையைப் புணர்தல். மூன்று மாதத்திற்கு ஒரு முறை நசியம் இடல், ஆறு மாதத்திற்கு ஒரு முறை மலசுத்தி செய்தல், ஆசனப்பயிற்சி போஷாக்குள்ள உணவுவகைகளை தெரிந்து உண்ணுதல் என்றவாறு அமையும்.

தொடரும்.

Dr.Rauf Jabbar (R.A.M.P)
www.siddhahealth.net




# சீனாவின் இராட்சத படைப்பு

தென் சீனக் கடல் பகுதியில் தனது இராணுவ பலத்தை மேம்படுத்தும் வகையில் சீன அரசானது, நிலத்திலும், வானிலும் செல்லக் கூடிய அதி நவீன விமானத்தை உருவாக்கியுள்ளது.

வானில் பறந்துகொண்டிருக்கும் போதே நிலத்திலும், நீரின் மேற்பரப்பிலும் இறங்கும் வகையில் இவ்விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஏ.ஜீ600 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விமானம் 37 மீட்டர் மொத்த நீளமும், 38.8 மீட்டர் நீளமுள்ள இறக்கையையும் கொண்டது.

53.5 டொன் சுமைகளை எடுத்துக்கொண்டு புறப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இவ்விமானம், 20 டொன் நீரையும் சுமந்து செல்லும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

இடைவிடாமல் 4500 கி.மீ பறக்கும் வல்லமை கொண்ட இந்த விமானம் வானில் பறக்கும் போது 53 டொன் சுமையை தாங்கக் கூடிய சக்தி கொண்டது.

நடுக்கடலில் ஏதேனும் கப்பல் விபத்து ஏற்படும் சமயத்தில் விரைந்து சென்று மீட்கும் வகையிலும், நிலப் பரப்பில் காட்டுத் தீ பற்றி எரிந்தால் உடனே சென்று அணைக்கும் வகையிலும் இவ்விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக சீன இராணுவப் பொறியியலாளர்கள் கூறியுள்ளனர்.

இந்த அதிநவீன விமானம் இந்த ஆண்டில் சோதனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டு விரைவில் இராணுவத்தில் இணைக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.



# செவ்வாயில் அமீரக நகரம்



செவ்வாய் கிரகத்தில் அமீரக நகரத்தை 100 ஆண்டுகளில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து அமீரக துணை அதிபர் ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம், அபுதாபி பட்டத்து இளவரசர் ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் ஆகியோர் கூட்டாக வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

உலகில் முதல் முறையாக செவ்வாய் கிரகத்தில் அமீரக நகரம் அமைக்கும் திட்டம் அறிவிக்கப் படுகிறது.இந்த திட்டம் அடுத்த 100 ஆண்டுகளில் நிறைவடைந்து செயல்பாட்டிற்கு வரும். இங்கு வசிக்கும் மக்களை இதே வசதிகளுடன் செவ்வாய் கிரகத்தில் தங்க வைத்து, அங்கும் ஓர் உயிரின வாழிடம் ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

மனிதனுடைய குறிக்கோள்களுக்கு எல்லையில்லை. இதில் கனவாக உள்ள அனைத்தும் நிறைவு செய்யும் வாய்ப்பு தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ளது. இது ஒரு மிக நீண்ட திட்டமாகும்.

அடுத்து வரும் தலைமுறைகள் இந்த பலனை அனுபவிப்பார்கள். இந்த திட்டத்தை மேம்படுத்த அமீரகத்தில் உள்ள அறிவியல் மற்றும் ஆராய்ச்சித்துறையில் படிக்கும் மாணவர்களை கொண்டு படிப்படியாக கட்டமைக்கப் படும்.

பூமிக்கு அடுத்தபடியாக மனிதர்கள் வாழ குறைந்தபட்ச தகவல் அமைப்புகள் செவ்வாய் கிரகத்தில் உள்ளன. இதில் குறிப்பாக செவ்வாய் கிரகத்தின் சராசரி வெப்பநிலை 63 டிகிரி செல்சியசாக உள்ளது. ஒருமுறை சூரியனை சுற்றி வருவதற்கு 687 நாட்கள் ஆகும். இங்கு பூமியில் இருந்து 2021-ம் ஆண்டு மனிதர்கள் சென்று ஆய்வு நடத்த உள்ளார்கள். இதற்காக அமீரகம் சார்பிலும் ஒரு விண்கலம் உருவாக்கப்பட்டு வருகிறது.

தற்போது இந்த செவ்வாய் கிரக நகரமைப்பு திட்டத்தின் மாதிரிப் படம் வெளியிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மனித குலத்திற்கு பயன்படும் வகையில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஒரு விதைதான். இது தரும் பழங்களை நமது எதிர்கால சந்ததிகள் ருசி காணட்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர்கள் கூறியுள்ளனர்.

# 8 ஆவதாக இன்னொரு கண்டம்

அவுஸ்திரேலியாவுக்கு கிழக்காக புதிய கண்டம் ஒன்றை கண்டுபிடித்திருக்கும் விஞ்ஞானிகள் அதற்கு 'சீலாண்டியா' என பெயரிட்டுள்ளனர்.

இது உறுதி செய்யப்படும் பட்சத்தில் 4.9 மில்லியன் சதுர கிலோமீற்றர் (1.89 மில்லியன் சதுர மைல்கள்) கொண்ட சீலாண்டியா பூமியின் எட்டாவது மற்றும் மிகச் சிறிய கண்டமாக இருக்கும்.




பசிபிக் சமுத்திரத்தில் பெரும்பாலும் நீரில் மூழ்கிய நிலத்தைக் கொண்ட இந்த பிராந்தியம் பல பில்லியன் டொலர் பெறுமதியான படிம எரிபொருட்களை கொண்டுள்ளது.

நியூஸிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆளுகை பகுதியான நியூ கலெடோனியா பிராந்தியத்தை கொண்டதாக இந்த கண்டம் அமைந்துள்ளது.

இதன்படி இந்த கண்டம் புதியதும், சிறியதும் மற்றும் அதிக நிலப்பகுதி நீரில் மூழ்கியதுமாக உள்ளது. இதன் 94 வீதமான நிலம் நீரில் மூழ்கி இருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏழு காண்டங்கள் உள்ளன. ஆபிரிக்கா, அண்டார்டிகா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா அவையாகும்.

'சீலாண்டியா' பூமியின் மறைந்த கண்டம் என்ற ஆவணத்தில் ஒரு கண்டமாக ஏற்றுக்கொள்வதற்கு தேவைப்படும் நான்கு அம்சங்களும் சீலாண்டியாவில் இருப்பதாக 11 புவியியலாளர்கள் வாதிட்டுள்ளனர்.

★★★

# 105 வயது முதியவரின் சாதனை

பிரான்சில் ஒரு மணிநேரத்தில் 22.5 கி.மீட்டர் தூரத்தை சைக்கிளில் கடந்து 105 வயது முதியவர் சாதனை படைத்துள்ளார்.

சாதனைக்கு வயது தடை இல்லை என்பார்கள். அதை நிரூபிக்கும் வகையில் 105 வயது முதியவர் ஒருவர் 1 மணி நேரத்தில் 22.5 கி.மீட்டர் தூரம் சைக்கிள் ஓட்டி சாதனை படைத்துள்ளார். அவரது பெயர் ரொபர்ட் மார்சண்ட். இவர் பிரான்சை சேர்ந்தவர். இவர் பாரீஸ் அருகே ஒரு விளையாட்டு மைதான ஓடு தளத்தில் சைக்கிள் ஓட்டினார். ஒரு மணி நேரத்தில் இவர் 22.5 கி.மீட்டர் தூரம் ஓட்டி சாதனை படைத்தார்.

அவரது சாதனையை பாராட்டி, அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கானோர் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இவர் தனது 102 வயது வயதில் 26.9. கி.மீட்டர் தூரம் வரை சைக்கிள் ஓட்டியுள்ளார்.

1911 ஆம் ஆண்டில் பிறந்த இவர் தனது 14 வயதில் மோட்டார் சைக்கிள் ஓட்ட பழகினார். தனது 67 வது வயதில் சைக்கிள் ஓட்டுவதில் ஆர்வம் காட்டினார். 2012 ஆம் ஆண்டில் அதாவது தனது 100ஆவது வயதில் 4 மணி 17 நிமிடம் 27 வினாடிகளில் 100 கி.மீட்டர் தூரம் சைக்கிள் ஓட்டி சாதனை படைத்தார். அதற்காக 6 மாதம் பயிற்சி மேற்கொண்டார்.



# சமாதான சகவாழ்வினை குலைக்கும் தீய சக்திகள்

சத்தார் எம். ஜாவித்

இலங்கையின் வரலாற்றில் 1985 ஆம் ஆண்டுக்கும் 2009ஆம் ஆண்டிற்கும் இடையிலான காலம் வடகிழக்கு மக்களுக்கு மட்டுமல்லாது முழு இலங்கை வாழ் மக்களுக்கும் ஒரு கறைபடிந்த காலம் என்றே கூறலாம். அந்தளவிற்கு மனித அழிவுகள் இடம் பெற்ற காலமாக அது பதிவாகியுள்ளது.

மேற்படி நிலைமைகளின் வெளிப்பாடுகள் இலங்கையின் அரசியல், பொருளாதார, கலை, கலாசார மற்றும் சமய விழுமியங்களில் பாரிய தாக்கங்களையும், குறைநிலைத் தன்மைகளையும் தோற்றுவித்து சமாதானமாகவும், புரிந்துணர்வுகளுடனும் வாழ்ந்த சமுகங்களை கூறுபோட்ட ஒரு துன்பியல் சம்பவமாகவே அதனை நாம் நோக்க வேண்டியுள்ளது.

சுமார் மூன்று தசாப்த காலத்தில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழக்கவும், மேலும் பல ஆயிரக்கணக்கான உறவுகளை அங்கவீனர்களாகவும், சமுதாயத்தில் மற்றவர்களில் தங்கி வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கும் உள்ளாக்கியதுடன் இன்னும் பல ஆயிரக்கண்கான பெண்களை விதவைகளாகவும், குழந்தைகளை அநாதைகளாகவும் ஆக்கியது என்றால் அதனை இலங்கையர் யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது அந்தளவிற்கு யுத்தம் மறக்க முடியாதளவு வடுக்களையே ஏற்படுத்திச் சென்று விட்டது எனலாம்.

மேற்படி நிலைமைகளுக்கு முக்கிய காரணமாக இருந்த விடயம் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளாத் தன்மைகளின் இறுதி வடிவம் என்றே கூறலாம். இவ்வாறான தாண்டவத்தில் இருந்து மீட்சி பெறவேண்டும் என்ற ஒவ்வொருவரின் பிரார்த்தனைகளும், வேண்டுதல்களும் ஏதோ ஒரு வகையில் 2009இல் அதிலிருந்து முற்றாகவே விடை பெறுவதற்கு வழிவகுத்தது எனலாம். இந்த வகையில் அதனை முடிவிற்கு கொண்டு வந்த ஒரு நபராக அல்லது செயல் வீரனாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் குறிப்பிடுவதில் எந்தத்தவறும் இல்லை என்றே கூறலாம்.

யுத்த வெற்றிக்குப் பின்னரான காலம் கறைபடிந்த சம்பவங்களின் துன்பியலில் இருந்து மீண்ட மக்களின் நலன்களில் அக்கறை செலுத்த வேண்டிய ஒரு விடயம் இருந்தது என்றாலும் அது கடந்த அரசினால் அல்லது முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவினால் மேற்கொள்ளப்படவில்லை என்ற விடயமே பலராலும் பேசப்பட்டதுடன் அதற்கான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டும் அது இடம் பெறவில்லை என்ற விடயத்திற்கு அப்பால் அவரின் காலத்தில் இனவாதம் விரிவடைந்து மக்கள் மீண்டும் ஒரு யுத்த யுகத்திற்கு கொண்டு செல்லப்படுவதற்கான இனவாதச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு அது தலைதூக்கி நாட்டின் சமாதானத்திற்கு ஆபத்தான ஒரு நிலைமையை ஏற்படுத்தியது. இந்த அபாயத்திலிருந்து விடுபடுவதற்காக மற்றொரு போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமைகள் சமாதானத்தையும், ஒற்றுமையையும் விரும்பிய மக்களுக்கும், ஒருசில அரசியல் தலைமைகளுக்கும் ஏற்பட்டது.எனினும் இனவாதத்துடனான மஹிந்தவின் அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டிய போராட்டம் இலகுவான விடயமாகவோ அல்லது சாதராண விடயமாகவே அப்போது காணப்படவில்லை என்பதற்கு அப்பால் மிகவும் அபாயகரமாக உயிரை பணயம் வைத்துச் செயற்பட வேண்டிய ஒரு போராட்டமாகவே அது இருந்தது எனலாம். கரணம் தப்பினால் மரணம் என்ற வகையிலேயே அவரின் ஆட்சியை முடிவிற்கு கொண்டு வர தற்போதைய ஜனாதிபதியும் அவருடன் இணைந்திருந்த ஏனைய அரசியல் தலைமைகளும் தமது ஒவ்வொரு காலடிகளையும் அச்சத்துடன் எடுத்து வைத்தே தமது பயணத்தை முன் நகர்த்தினர் எனலாம்.



இவ்வாறான பல பிரயத்தனங்களுக்கும், அபாயங்களுக்கும் மத்தியில் தற்போதைய தேசிய நல்லிணக்க அரசு உதயமானதுடன் கடந்த காலத்தில் நிம்மதியிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயிரூட்டமுள்ள ஒரு அரசாக மக்கள் நம்பி வாக்களித்து வெற்றி பெறச் செய்தனர் என்றால் அது மிகையாகாது.

இந்த நிலைமைகளின் பின்னர் இன ஒற்றுமையையும், சமாதானத்தையும் ஏற்படுத்தி இலங்கையின் சிறுபான்மை மக்களான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நீண்டகால இனப்பிரச்சினை மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் குடியேற்றம், காணிப் பிரச்சினை, வீடமைப்புத்திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு விடயங்களை அரசு மேற்கொள்ள வேண்டிய நிலையில் அதன் செயற்பாடுகள் இன்றுவரை மிகவும் மந்தகதியில் செல்வதை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறான நிலையில் இனப்பிரச்சினை தீர்வு, வடகிழக்கில் படைத்தரப்பினராலும், வன பரிபாலன சபையினராலும் சட்ட ரீதியற்ற வகையில் சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை மீளக் கையளித்தல் போன்ற முக்கிய விடயங்களுக்கு அரசுடன் இணைந்து தற்போது பலதரப்பட்டவர்களும் முயற்சிக்கின்ற வேலையில் அதீத அக்கறையுடன் வடகிழக்கைச் சேர்ந்த ஒருசில தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றதை காண முடிகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளில் இன விரிசல்கள் ஏற்படாத வகையில் மூவினத்துடனும் உறவுகளை மேற்கொண்டு தமது சமுகத்திற்காகவும் அவர்களின் இனப்பிரச்சினை விடயங்களுக்காகவும் பெரும்பான்மை மக்களை பகைத்துக் கொள்ளாத வகையில் அதிதீவிரமாக குரல் கொடுத்து வரும் ஒருவராக மட்டுமல்லாது சகலராலும் விரும்பப்படும் ஒருவராகவும் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் காணப்படுகின்றார்.

இவரை கொலை செய்வதற்கான முயற்சிகள் அன்மையில் மேற்கொள்ளப்பட்ட விடயம் தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளதுள்ளதையிட்டு பலரும் கவலை கொண்டுள்ளனர். பயங்கரவாதமற்ற தற்போதைய சமாதான சூழ் நிலையில் இவர் மீது மேற்கொள்ள எடுக்கப்பட்ட கொலை முயற்சியை சகலரும் வன்மையாகக் கண்டிக்கின்றனர். மக்களின் நலன்களுக்காக குரல் கொடுக்கும் ஒருவரை கொலை செய்ய எடுத்த முயற்சியில் தமிழ் இளைஞர்களே சம்பந்தப்பட்டுள்ளமை மிகவும் வெட்கப்பட வேண்டிய கேவலமான விடயமாகும்.

ஏதோ ஒரு வகையில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை இந்த அரசின் மூலம் தீர்த்துவிட வேண்டும் என்ற அதீத அக்கறை கொண்டுள்ள நபர்களில் துணிச்சல் மிக்க ஒருவராக காணப்படும் சுமந்திரனைக் கொலை செய்வதன் மூலம் இந்த நாட்டில் தீர்வு கிட்டிவிடும் என்று எதிர்பார்த்தால் அது மடத்தனத்தின் உச்சக்கட்டம் என்றே கூறலாம். இவரைக் கொலை செய்வதற்கான முயற்சியில் பலவாறான சந்தேகங்கள் மக்கள் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக அவருக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுக்கும் நபர்கள் விடயத்திலும், அவருக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொண்டு தொடராக செய்திகளை வெளியிடும் ஒருசில தனியார் ஊடகங்கள் விடயத்திலும் அவதானம் செலுத்த வேண்டியுள்ளதையே இந்தக் கொலை முயற்சியின் பின்னணி காட்டி நிற்கின்றது. காரணம் தற்போதைய நிலையில் யாரையும் கிளைமோர் குண்டு வைத்து கொலை செய்ய வேண்டிய தேவை இன்றைய சூழ் நிலையில் இல்லாதபோது யுத்த காலத்தில் இடம் பெற்ற பாணியில் கிளைமோர் குண்டுகள் வைத்து ஒருவரை கொலை செய்வதென்பது அதில் முன்பு பரிச்சயம் பெற்றவர்களின் மூலமே மேற்கொள்ள முடியும். இந்த விடயத்தில் இலங்கை வாழ் மக்கள் யுத்த காலத்தில் கண்டு கொண்ட உண்மைச் சம்பவங்களாகும்.

தற்போதைய சமாதான சூழ் நிலையில் சிறுபான்மை மக்களுக்காக பெரும்பான்மையினர் இடத்தில் துணிச்சலுடன் குரல் கொடுக்கும் நபர்களை ஒழிக்க நினைக்கும் விடயம் இந்த நாட்டில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தீர்வின்றி தொடருவதற்கான நிலைமைகளையே வலுப்படுத்துமே தவிர அதனால் வெற்றி கொள்ள முடியாது என்பதே யதார்த்தமான விடயமாகும். தமக்குரிய உரிமைகளும், சலுகைகளும் வேண்டும் என்று கோஷமிடும் ஒருசில தமிழ் அரசியல் வாதிகளால் இவ்வாறான விரும்பத்தகாத விடயங்களில் ஈடுபடுவதென்பது அனைவராலும் குறிப்பாக சமாதானத்தையும், நிலையான தீர்வையும் எதிர்பார்க்கும் தரப்பினரால் கடுமையாக கண்டிக்கப்படுகின்றது.

குறுகிய சுயநல அரசியல் வங்குரோத்து கொண்ட செயற்பாடுகளில் இருந்து விலகி சமுகத்திற்கு செய்ய வேண்டிய ஆக்கபூர்வமான விடயங்களில் ஈடுபட வேண்டியதே தமிழ் அரசியல்வாதிகளின் தேவையாகும். தமது அரசியல் பின்னடைவுகளை ஈடு செய்வதற்கு சமுகத்தின் நலன்களுக்காக துணிச்சலுடன் குரல் கொடுக்கும் அரசியல் வாதிகள் விடயத்தில் முரண்படுவதும் அவர்களை தமது காழ்ப்புணர்ச்சிகளால் எதிர்ப்பதும் சிறுபான்மைச் சமுகங்களின் தீர்வு விடயத்திற்கு தோண்டப்படும் படுகுழியாகும் என்பதனை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொண்டு செயற்படுவதே சாலச் சிறந்ததாகும். இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று முடிவுகளை உடன் எடுக்க முடியாது. காரணம் சுமார் முப்பது, நாற்பது வருடகால பிரச்சினையாக இலங்கையின் இனப்பிரச்சினை காணப்படுவதால் அதனை 75 சதவீதமான பெரும்பான்மை மக்களின் ஆதரவுடனும், சம்மதத்துடனுமே பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அந்த வகையில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை முடிவிற்கு கொண்டு வருவதற்கு சமயோசிதமாக தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவையும், அவதானமும் சிறுபான்மை அரசியல் தலைமைகளுக்கு உள்ளது. இவ்வாறான ஒரு செயற்பாட்டையே சுமந்திரன் போன்றவர்கள் நிதானமாக முன்னெடுத்து வருகின்றனர் என்பது வெளிப்படையான விடயமாகும். இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஒருசில சக்திகளே அவரை அழிக்க நினைக்கின்றனர். எனவே இலங்கையின் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை சரியான முறையில் தீர்த்து வைக்கப்படக் கூடிய ஒரு காலமாக இந்த அரசாங்கத்தின் காலம் காணப்படுவதால் அதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முனைய வேண்டுமே தவிர பெரும்பான்மை மக்கள் நம்பக்கூடிய சுமந்திரன் போன்றவர்களை அழிக்கத் துடிக்கும் அரசியல் சக்திகள் அவரை அழித்து எதனையும் தம்மால் சாதித்துவிட முடியாது என்பதனை நிறையவே சிந்திக்க வேண்டியுள்ளது.

---


# மூன்றாம் உலகம் தொடர்பான முக்கியத்துவம்

சூரி ரத்னபால

(நேற்றைய தொடர்ச்சி)

சில மக்கள் அவர்களது நிலைமை பற்றி தம்மீது கொண்டுள்ள தெரிவுகள் தொடர்பில் தலையீடு செய்வதற்கு அல்லது வினா எழுப்புவதற்கு எமக்கு உரிமையில்லாதபோது அவர்களின் இறுதி முடிவுகளில் நாங்கள் ஏன் கரிசனை கொள்ள வேண்டுமென விடுதலை ஆதரவுக்கோட்பாட்டாளர்கள் வினவலாம். இந்த வினா மூலம் எழுப்பப்படுகின்ற கரிசனை மிக்க தத்துவார்த்த விடயங்களை நான் இங்கு கையாளமுடியாது. சுய பாதுகாப்பு மற்றும் மனிதப் பேரழிவைத் தடுத்தல் போன்ற உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பகிரங்க சர்வதேசச் சட்டம் மற்றும் வெளிப்படையான நிலைமைகளில் மட்டும் நியாயப்படுத்தக்கூடிய ஏனைய நாடுகளின் அலுவல்களில் வற்புறுத்தப்படும் தலையீடு தொடர்பில் நான் பேணிவருகிறேன். தாராளமய எண்ணம் மற்றும் அதை மேற்கொள்வதற்கென உள்ள கட்டாயமான நடத்தை மற்றும் பொருளாதாரக் காரணிகள் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்லும் பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்தை ஊக்குவிக்கும் தாராளமயக் கொள்கைகளினுள் மேற்கொள்ளக் கூடியதாக ஏதேனுமிருப்பின் அது தொடர்பில் விசாரணை மேற்கொள்வது முக்கியத்துவம் பெறுகிறது.

நிறுவன ரீதியாக பாரிய குறைபாடுகளையுடைய நாடுகளும் கூட மனிதன் அல்லது இயற்கைப் பேரழிவுகள் (Sen 1999) தொடர்பில் மனிதாபிமான நடவடிக்கைகளுடன் இணைந்து செல்லமுடியாமல் உள்ளன. எனவே, பொருளாதாரக்கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி நாடுகளுக்கான தாபனத்தின் (OECD) சனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் அத்தகைய பேரழிவுகள் தொடர்பில் புறக்கணிப்புச் செய்ய முடியாது. எனினும், இந்த நாடுகளில் உயர்மட்டத்தில் உள்ள வரியிறுப்பாளர்கள் ஏனைய தேசிய அரசாங்கங்களின் அறிவீனத்தை (முட்டாள்தனத்தை) தொடர்ந்தும் சகித்துக் கொண்டிருக்கின்றனர். பேரழிவுகள் ஒரு புறமிருக்க, இந்த நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் அடிமைத்தனமானது பின்வரும் வழிகளில் நலன்புரிச்சுமையை கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட சனநாயகங்களில் ஏற்படுத்துகிறது: அபிவிருத்தியடைந்த நாடுகளினால் நேரடியாக மற்றும் மறைமுகமாக சர்வதேச முகவராண்மைகளினால் வழங்கப்படும் உதவிகள் மற்றும் சலுகை அடிப்படையிலான கடன் ஆகியவற்றில் ஏற்படும் பாரிய நிதி மாற்றம் நாட்டில் நிலவும் அடிமைத்தன்மை மற்றும் உதவியற்ற நிலைமை காரணமாக வெளியேறும் புலம்பெயர் மக்கள் ஆகியவற்றின் மூலமாகும். அத்தகைய அகதிகளை ஏற்றுக்கொள்வது தொடர்பில் வலுக்கட்டாயப்படுத்தப்பட்ட விவாதங்கள் இருப்பினும், தமது நாடுகளை விட்டு வெளியேறுவதற்கான காரணம் இல்லாதபோது மற்றும் ஏகோபித்த முறையில் நன்மையுடையதாக ஒழுங்கான பாதுகாப்புடன் கூடிய தன்னார்வ புலம்பெயருகை ஏற்படுவதாயின் அது உண்மையில் விரும்பத்தக்கது. சர்வதேச பயங்கரவாதம் தொடர்பில் தாராளமயமற்ற ஆட்சிகள் மூல காரணமாக அமைகின்றதென்பதை சர்ச்சைக்குரியதாக்குவது மிகவும் கடினாகும். தாராளமயக் கொள்கையுடன் சவூதி அரேபியா அல் ஹைதா இயக்கத்தின் தோற்றத்திற்கு காரணமாக அமையாது என்பதை எனது தாராளமயக் கொள்கையுடைய முஸ்லிம் நண்பர்கள் ஆக்கபூர்வமான முறையில் வாதிடுகின்றனர். பயங்கரவாதிகளின் செயற்பாடுகள் / நடவடிக்கைகள் தாராளமய சனநாயகத்திற்கு ஏற்படுத்தும் சேதங்களை வகைப்படுத்த வேண்டியது கடினமாக உள்ளது. எனினும், பயங்கரவாதத்தினால் ஏற்படுத்தப்பட்ட வேதனைகள் என்பது உயிர் மற்றும் உடைமை இழப்புடன் மட்டுமன்றி (இத் தாக்கங்கள் தொடர்பில் நியாயமற்ற முறையில் ஏற்கமுடியாத போதிலும்) பாதுகாப்புச் செலவினம் அதிகரிக்கப்படவுமில்லை. தேசிய அவசர நிலைமை தொடர்பான வேலையில் அரசுகளுக்குக் கிடைக்கப்பெறும் அதிவிசேட தத்துவங்களின் விளைவாக சட்ட ஆட்சியானது பாதிக்கப்படும் ஆபத்தை எதிர்கொள்கிறது. பயங்கரவாதிகள் ஏற்படுத்தும் மேலதிக அழிவுகளை விட அவர்கள் பங்கேற்கும் நடவடிக்கைகள் மூலமாக சமூகங்களின் விடுதலை தொடர்பில் அதிகளவு தீங்கு ஏற்படுத்துகின்றனர். மூன்றாம் மண்டலத்தின் (நாடுகளின்) விடுதலையை ஊக்குவிப்பது தொடர்பில் உறுதியான காரணமாக சந்தைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதுடன் தாராளமயக் கொள்கையுடனான அரசியலமைப்பிற்கும் வழிவகுக்கிறது. உலகமயமாக்கல் (Globalization) எனும் சொல் இத்தகைய புதிய தோற்றப்பாட்டிற்கான பிரபல்யம் வாய்ந்த சொல்லாக அமைகிறது. பிரபல ஊடக மற்றும் சமூக வருணனையாளர்களினால் மிக அண்மையில் இச்சொல் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் இந்நடவடிக்கையானது, சந்தைப் பொருளாதாரத்தின் எழுச்சியுடனான அதன் தெளிவற்ற தோற்றத்துடன் இணைந்துள்ளது. தனியார் உடைமை நிறுவனங்களின் வளர்ச்சி, உடன்படிக்கை மகத்துவம், பொதுவாக சகலருக்குமான சட்டப் பாதுகாப்பின் விரிவாக்கம் ஆகியவற்றின் மூலம் அந்நிய நபர்களுக்கிடையில் வர்த்தக வளர்ச்சியின் விளைவாக சந்தைப் பொருளாதாரம் எழுச்சியுற்றது. நாகரிகம் என்பது பற்றி நாங்கள் அறிந்திருப்பது யாதெனில், தனி நபர்களுக்கிடையிலான பரிவர்த்தனைகளினால் இன மரபுக்குழுக்கள் பெரிய சனசமூகங்களாக ஒன்றுதிரண்டு அவை மீண்டும் நகரங்கள், நாடுகள் மற்றும் சர்வதேச சனசமூகங்களாகியுள்ளன. மேலும், வர்த்தகம் முன்னேற்றகரமான முறையில் மக்களை ஒன்றிணைத்து விசேடத்துவம் மற்றும் பரிவர்த்தனை மூலமாக பொருளாதார, கலாசார ரீதியில் அவர்களை வளப்படுத்தி Hayek என்பவரின் சொல்லிற்கிணங்க மனித இடைவினை அல்லது நாகரிகம் தொடர்பான நீடித்த ஒழுங்கு (1991, 39-47; மற்றும் Bauer 2000, 6 என்பதையும் பார்க்க) உருவாக்கப்பட்டது. இந்த நாகரிகம் முடிவுறாத செயன்முறையாக பாரிய நன்மைகளை ஏற்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருப்பினும், சட்ட ஆட்சி மூலம் வழங்கப்படும் வாழ்வு, விடுதலை (சுதந்திரம்) மற்றும் உடைமை தொடர்பான பாதுகாப்பிலும் பார்க்க சிறந்தது அல்ல. எனினும், அவர்களின் இணைப்பு தராதரமற்ற சிறப்பாக அமையாத போதிலும், உலக குடித்தொகையின் அரைப்பகுதிக்கு மேலதிகமானோர் தொடர்பு அற்று அல்லது உரிமை ரீதியாக தொடர்புற்ற நிலையில் உள்ளனர். அரசியலமைப்பு அரசாங்கம் சனசமூகத்தின் சாத்தியப்படக்கூடிய நிலை அல்லது உந்துவிசைக்குச் சட்டமாக்கப்பட முடியாது. எனவே, அதன் அடைவு மற்றும் பேணுகை என்பது பொருத்தமான நிலையில் கூட அதன் இயல்பு, அதிகளவு கடின உழைப்பு மற்றும் சிறந்த எதிர்காலம் பற்றிய தொடர்பு ஆகியன வேண்டற்பாலது. முன்னர் குறிப்பிட்டது போல, அரசியலமைப்பு அரசாங்கம் பற்றிய குறித்த எண்ணக்கருவாக்கத்தின் அறிவுசார் பொருத்தப்பாடு, இந்த எண்ணக்கருவாக்கத்தை தேசிய அரசியலமைச்சு வடிவிலான உத்தியோகபூர்வ நடைமுறையாக்கல், நிறுவன ரீதியான அடிப்படைக்கு ஆதரவு மற்றும் சாதகமான பொருளாதாரச் சூழமைவு ஆகியன இதற்குத் தேவைப்படுகிறது.



(தொடரும்...)

# அடுத்து வரும் தேர்தல்களில் ஐ.தே.கவே வெற்றியீட்டும்

## லகி ஜயவர்த்தன எம்.பி

(இக்பால் அலி)

இனிவரும் காலங்களில் எத்தகைய தேர்தலை வைத்தாலும் அந்த தேர்தலில் எந்த சந்தேகமுமின்றி வெற்றிபெறப் போவது ஐக்கிய தேசியக் கட்சியாகும் என்று கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் லகி ஜயவர்தன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு உடுநுவரப் பிரதேச விஹாரையில் இடம்பெற்ற சமய வழிபாட்டில் கலந்து கொண்ட பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் லகி ஜயவர்தன ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்

ஜே. ஆர். ஜயவர்தனவினால் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார தேர்தல் முறையின் படி ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவப் போவதில்லை. கூட்டு எதிர்க்கட்சியினர் எதைப் பேசினாலும் புதிய அரசாங்கம் பயப்பட வில்லை. ஊழலற்ற தேர்தல் நியாயமான முறையில் இடம்பெறும் என்பதால் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் என்பதிலும் சந்தேகம் இல்லை.

நல்லாட்சி அரசாங்கம் அபிவிருத்தி வேலைப்பணிகள் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப துரிதமாக நடைபெற்று வருகின்றது. அரசாங்கம் ஆட்சி அமைத்து தற்போது ஒன்றரை வருடங்களாகின்றன. பாரியளவிலான அபிவிருத்தி செய்வதற்கான கால அவகாசம் இல்லை. எதிர்வரும் காலத்தில் சகல வேலைப்பணிகளும் துரித கதியில் முடிவடைந்து விடும். கடந்த காலத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு சட்ட திட்டங்களுக்கு ஏற்ப உடனடி தண்டனைகள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இனவாதிகளின் தடைகளுக்கு மத்தியிலும் சமூக முன்னேற்றத்துக்காக அதிக பணி

## மன்னார் காக்கையன் குளத்தில் அமைச்சர் றிஷாட்





(சுஐப் எம் காசிம்)

யுத்த காலத்திலும் யுத்த முடிவின் பின்னரும் மக்களுடன் இணைந்து பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்த அரசியல்வாதிகள் முன்னின்று பணியாற்றினார்கள் என்று அந்த மக்களுக்கு நன்கு தெரியும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார் காக்கையன் குளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது,

நாட்டிலே சமாதானம் ஏற்பட்டு நமது பிரதேசத்திலும் அமைதி ஏற்பட்ட பின்னர் நமது மக்கள் மீளக்குடியேறி ஓரளவு அடிப்படைத் தேவைகளை பெற்றுக் கொண்டு வாழும் போது வாக்குகளுக்காகவும், அரசியல் இருப்புக்களைப் பாதுகாப்பதற்காகவும் இந்தப் பிரதேசங்களுக்கு வந்து தங்களையும் ஒரு சேவையாளர்களாக மக்கள் மத்தியில் சிலர் காட்டிக் கொள்கின்றனர்.

நமது சமூகம் குடியிருந்த காணிகளை காடுகள் மூடிக்கிடந்த போதும் கட்டிடங்கள் தகர்ந்து கிடந்த போதும் அவற்றை அப்புறப்படுத்தி புதிய கட்டிடங்களையும் வீடுகளையும் பாடசாலை மண்டபங்களையும் மாடி வகுப்பறைகளையும் கட்டிக் கொடுத்தவர்கள் யாரென்று மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் தெரியும்.

யுத்த காலத்திலே அந்தப் பீதியிலே மக்கள் வாழ்ந்த போது தீவிரவாத கெடுபிடிகளுக்கு மத்தியிலே இறைவனின் பாதுகாப்பைத்தவிர வேறெந்த பாதுகாப்பும் இல்லாது இந்தப் பிரதேச த்துக்குள் நுழைந்து மின்சார வசதி களையும் மற்றும் இன்னோரன்ன தேவைகளையும் கவனித்தவர் யாரென்று நன்றியுள்ள மக்களுக்கு நன்கு தெரியும்.

இனவாதிகளினதும் இனத்துக்காக குரல் கொடுப்பதாக கூறி வருபவர்களினதும் தடைகளுக்கும் முட்டுக் கட்டைகளுக்கும் மத்தியிலேயே நாம் தொடர்ந்தும் பணி புரிகின்றோம். அவர்களது அபாண்டங்களும் அவச் சொல்லும் எம்மை ஒன்றும் செய்துவிடப்போவதில்லை. மக்களை நிம்மதியாக வாழ வைப்பதே எமது இலக்காகும்.

'தடியெடுத்தவர்களெல்லாம் சட்டாம்பிகளென்ற நிலை' இன்று அரசியல் உலகிலே வந்து விட்டதினால் நாங்கள் மிகவும் நுணுக்கமாகவும் கவனமாகவும் பணியாற்ற வேண்டிய நிலை இருக்கின்றது. வேண்டுமென்றே ஊடகங்களில் இட்டுக்கட்டப்பட்ட கதைகளை நேற்று முளைத்த சில அரசியல் காளான்கள் பரப்பி வருகின்றனர். விஷமத்தனமான இனவாதக் கண்ணோட்டத்துடனான இவர்களின் பரப்புரைகளை மக்கள் இப்போது செவி சாய்க்கத் தயாரில்லை.

காக்கையன் குளம் இரணையிழுப்பைக் குளம் போன்ற இந்த பிரதேசங்கள் இன ஐக்கியத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கி வருகின்றது. இந்த ஐக்கியத்தை சீர் குலைக்க எவரும் இடமளிக்கக் கூடாதெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களின் பன்முக நிதியை ஏழு மில்லியனாக அதிகரிக்கவும்

## உதுமாலெப்பை கோரிக்கை



(அட்டாளைச்சேனை றியாஸ் ஆதம்)

கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதியை ஏழு மில்லியன் ரூபாயாக அதிகரிக்குமாறு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ்.உதுமாலெப்பை கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் அமர்வு, நேற்று (22) தவிசாளர் சந்திரதாச கலப்பதி தலைமையில் கூடியது. இதன்போது இது தொடர்பான தனிநபர் பிரேரணை ஒன்றினை சமர்ப்பித்து உரையாற்றியபோதே, அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றியபோது, சப்ரகமுவ மாகாணத்தில் மாகாண சபை உறுப்பினர்களுக்கு 50 மில்லியன் ரூபா நிதியும், வாகன வசதிகளும் வழங்கப்படுகின்றன. அதேபோன்று இன்னும் சில மாகாண சபைகளிலும் அதிகமான நிதியும் வழங்கப்படுகிறது.

ஆனால் தற்போது கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு 4 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்படுகின்றது. எமது மாகாண சபை விரைவில் கலையும் நிலையில் இருக்கின்ற காரணத்தாலும் மக்களுக்கான பல வேலைத்திட்டங்கள் செய்ய வேண்டியுள்ளமையாலும் மாகாண சபை உறுப்பினர்களுக்கான நிதியை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது.

எனவே, இந்த வருடத்தில் இவர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியை அதிகரித்து வழங்க வேண்டும் எனவும் உதுமாலெப்பை குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட், எதிர்க்கட்சி தலைவர் உதுமாலெப்பையினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை முக்கியமானது. அதனை நான் வரவேற்கின்றேன். இருந்தாலும் நிதி நிலைமையை ஆராய்ந்து சாதகமான முடிவு எடுக்கப்படும், ஏற்கெனவே பல திட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையிலும், அவற்றுக்கான நிதி இன்னும் கிடைக்காமல் உள்ளது என்றார்.

# நிரந்தரமான தீர்வு கிட்டும் வரை எமது போராட்டம் தொடரும்

## மட்டு. மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்



(காத்தான்குடி பழுலுல்லாஹ் பர்ஹான்)

எங்களது கோரிக்கைகள் நிறைவேறாத நிலையிலேயே இந்தப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளோம். எமது போராட்டத்திற்கு நிரந்தரமான தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று மட்டக்களப்பில் சத்தியாக்கிரகப் போராட்டத்தினைத் தொடர்ந்து வரும் வேலையற்ற பட்டதாரிகள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்பாக, மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் இணைந்து வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்ட, மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் சத்தியாக்கிரகப் போராட்டம் 2ஆவது நாளாகவும் நேற்று தொடர்ந்தது.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகள், பட்டதாரிகளின் திறமைகளை ஒரு குறிப்பிட்ட போட்டிப்பரீட்சையின் மூலம் அறிந்து கொள்ள முடியாது. ஆகையால், போட்டிப் பரீட்சையின்றி, நேர்முகப் பரீட்சையின் மூலம் பயிற்சி அடிப்படையில் நியமனங்களை பட்டதாரிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பட்டதாரிகளுக்கான நியமனங்கள், அவர்கள் பட்டம் பெற்ற ஆண்டின் அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், இதற்கான வயது எல்லையை 45ஆக அதிகரிக்க வேண்டும். பட்டதாரி நியமனங்களுக்கு விண்ணப்பம் கோரப்படும்போது, ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்கள் விண்ணப்பிக்காத வகையில் சுற்றுநிருபம் அமைய வேண்டும். கோட்டா முறையில் நியமனங்களை வழங்கும் செயற்பாட்டை தடை செய்ய வேண்டும். விண்ணப்பம் கோரப்படும்போது, மாற்றுத்திறனாளிகள் விஷேட கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்ட கிழக்கு மாகாண ஆசிரியர் வெற்றிடத்தை வெளியிட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் 2012.03.31 இற்குப் பின்னர் பட்டம் பெற்ற 4500 இற்கு மேற்பட்ட பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றி உள்ள போதும் இவர்களுக்கு எந்த ஒரு தீர்வையும் மத்திய மற்றும் மாகாண அரசுகள் பெற்றுத்தராத நிலையில் இந்த கால வரையறையற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் பட்டதாரிகள் தெரிவிக்கின்றனர்.

வேலையற்ற பட்டதாரிகளாகிய நாங்கள் மேற்கொண்டுள்ள குறித்த சத்தியாக் கிரகப் போராட்டத்தினை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து வருகின்ற நிலையில் இதுவரையில் போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு எந்த அரசியல் வாதிகளோ, அரச அதிகாரிகளோ வந்து எங்களுடைய பிரச்சினை தொடர்பில் கேட்டறியவில்லை என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# சாரணர் இயக்கத்தின் தந்தை பேடன் பவலின் பிறந்த தின நிகழ்வு





(காத்தான்குடி பழுலுல்லாஹ் பர்ஹான்)

உலக சாரணர் இயக்கத்தின் தந்தை பேடன் பவலின் 160ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் உலக சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகரின் பிறந்த தின நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு மகாத்மா காந்திப் பூங்காவில் இருந்து ஊர்வலம் ஆரம்பிக் கப்பட்டு மட்டக்களப்பு நீரூற்று பூங்காவிலுள்ள சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன் பவலின் உருவச்சிலை அருகாமையில் நிறைவுபெற்றது. அதனைத் தொடர்ந்து தேசியக் கொடி மற்றும் சாரண கொடி என்பன ஏற்றப் பட்டதுடன், சாரணர் தந்தை பேடன் பவுலின் உருவச்சிலைக்கு அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு மெதஸ்டித மத்திய கல்லூரியின் அதிபர் ஜே.ஆர்.பி.விமல்ராஜால் மாலை அணிவிக்கப்பட்டது.

சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகரின் பிறந்த தின நிகழ்வில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, மெதடிஸ்த மத்திய கல்லூரி, வின்சன்ற் மகளிர் தேசியப் பாடசாலை, புனித சிசிலியா தேசியப் பாடசாலை, வை.எம்.சி.ஏ. சாரணர் குழு, கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயம், சிவானந்தா தேசியப்பாடசாலை ஆகியவற்றின் குருளைச்சாரணர்கள். இளைஞர் சாரணர்கள், பெண் சாரணர்கள், திரி சாரணர்கள் உட்பட சாரண ஆசிரியர்கள் அடங்கலாக 500 சாரணர்கள் பங்கு கொண்டனர்.

சாரணர் இயக்கம் முதன் முதலாக யுத்தத்தினால் மன நலம் பாதிக்கப்பட்ட மக்களுக்காக செயற்பட்டிருந்தார்கள். உலகின் 147 நாடுகளில் 25 மில்லியன் பேர் சாரண இயக்கத்தில் அங்கத்தவர்களாக உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேருவளையில் டெங்கு நோயாளருக்கு இலவச மருத்துவ பரிசோதனை

(பேருவளை நிருபர்)

பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோய் தீவிரமாக பரவியுள்ளதையடுத்து இரு நாட்களாக காய்ச்சல் நோய் உள்ளவர்களுக்கான இலவச இரத்தப்பரிசோதனை முகாமொன்று பேருவளை சீனன் கோட்டையில் நேற்று 22 ஆம் திகதி இடம்பெற்றது. சீனன் கோட்டை பளீல் ஹாஜியார் மாவத்தையில் உள்ள வைத்தியர் நூருல் இஸ்லாமின் சீனன் கோட்டை பள்ளிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த இலவச இரத்தப்பரிசோதனை முகாம் இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என 160க்கு மேற்பட்டோர் இதன்போது இரத்தப்பரிசோதனை செய்துள்ளனர்.

சீனன்கோட்டை பள்ளிச்சங்க தலைவர் ராமிஸ் ஏ.கபூர், பிரதித்தலைவர் எம்.எஸ். எம். துகைன், இணைச்செயலாளர் எம்.எம். எம். சிஹாப், உறுப்பினர் எம்.எம்.எம். ஹில்மி, நகரசபை செயலாளர் பி.டி.ஏ.கே. கயந்தி, பொது சுகாதார பரிசோதகர்களான டபிள்யு.டி.எல். உமேக, டபிள்யு. ஓ.கே. குமார ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# பேரினவாதிகளுக்குத் தீனி போடும் தம்புள்ளை பள்ளி

எம்.ஏ.முஹம்மட் உவைஸ்

அரசியலில் வங்குரோத்து நிலையை அடைந்த மக்கள் செல்வாக்கை இழந்த அரசியல்வாதிகள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்குக் கையில் எடுக்கும் ஆயுதம்தான் இனவாதம். பெரும்பான்மை இன மக்களின் வாக்குகளைக் குறிவைத்து சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இந்த இனவாதம் திருப்பிவிடப்படுகின்றது. இதனால் எழுகின்ற கிளர்ச்சிகள்-பேரழிவுகளின் ஊடாக அந்த வங்குரோத்து அரசியல்வாதிகள் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வருகின்றனர்.



இவர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே இவ்வாறு இனவாதத்தைத் தூண்டுகிறார்கள் என்பதை அறியாத மக்கள் அந்த அரசியல்வாதிகளின் இனவாதத்துக்குள் சிக்கி இன உறவையும் நாட்டின் ஸ்திரத் தன்மையையும் சீரழிக்கின்றனர்.

இந்த மோசமான இனவாத அரசியல் இலங்கையில் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இந்த நாட்டில் இடம் பெற்று வந்த யுத்தத்தை அடிப்படையாக வைத்து தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாதத்தைத் தூண்டி அரசியல்வாதிகள் ஒருபுறம் அரசியல் செய்தனர். மறுபுறம், முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டி அரசியல் செய்கின்றனர்.

இலங்கையின் வரலாற்றில் பல இனக் கலவரங்கள் இடம்பெற்றுள்ளன. சுமார் 100 வருடங்களுக்கு முன் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனக்கலவரம், 2001இல் இடம்பெற்ற மாவனெல்லை கலவரம் மற்றும் அளுத்கம கலவரம் போன்றவை முஸ்லிம்களுக்கு எதிராக பேரினவாதிகளால் நிகழ்ந்த்தப்பட்ட இனக் கலவரங்களுள் சிலவாகும்.

அதேபோல், தமிழ் மக்களுக்கு எதிராகவும் பல இனக் கலவரங்கள் பேரினவாதிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளன. 1983 ஜூலைக் கலவரம் அவற்றுள் முக்கியமானதாகும்.

இவ்வாறு இலங்கையின் வரலாறு நெடுகிலும் பேரினவாத அரசியல்வாதிகள் தமிழ்-முஸ்லிம் மக்களைப் பேரினவாதத்துக்குப் பலி கொடுத்தே தங்களது ஆட்சி அதிகாரங்களைத் தக்கவைத்து வந்துள்ளனர். இந்த நாடு இன்னும் முன்னேறாமல் இருப்பதற்கும் தமிழர்கள் தனிநாடு கோரி நின்றதற்கும் இந்த அரசியல் போக்கே காரணம்.

யுத்தம் முடிந்ததும் இனவாத அரசியலும் முடிவுக்கு வந்துவிடும் என மக்கள் நினைத்தனர். அவர்களின் எதிர்பார்ப்பு பிழைத்துவிட்டது. தானும் இனவாதத்தைக் கொண்டு அரசியல் பிழைப்பு நடத்துபவன்தான் என்ற உண்மையை மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டுக்கு காட்டத் தொடங்கினார்.

மஹிந்தவின் யுத்த வெற்றியால் கட்டியெழுப்பப்பட்ட மஹிந்தவின் ஆட்சி ஓரிரு வருடங்களில் ஆட்டங்காணத் தொடங்கியது. யுத்த வெற்றியை விடவும் ஊழல்,மோசடி மற்றும் வாழ்க்கைச் செலவின அதிகரிப்பு இந்த நாட்டு மக்களுக்குப் பெரிதாகத் தெரிந்தது. இதனால் மஹிந்தவின் மக்கள் செல்வாக்கு மெல்ல மெல்ல சரியத் தொடங்கியது. அதைச் சரி செய்வதற்கு அவர் இனவாதம் என்ற ஆயுதத்தைக் கையில் எடுக்கத் தொடங்கினார்.

முஸ்லிம்களுக்கு எதிராக பொது பல சேனா போன்ற பேரினவாத அமைப்புகள் தோற்றம் பெற்றன. முஸ்லிம்களின் வர்த்தகம், கல்வி மற்றும் மார்க்க விடயங்கள் என அனைத்துக்கும் எதிராக இந்தப் பேரினவாத அமைப்புகள் பிரசாரம் செய்தன. இதன் விளைவாக இறுதியில் அளுத்கம முஸ்லிம்களுக்கு எதிராக இனக்கலவரம் ஒன்று நிகழ்த்தப்பட்டது. முஸ்லிம்களின் சொத்துக்களும் உயிர்களும் அழிக்கப்பட்டன.

இதன் பிறகு ஒன்றிணைந்த தமிழர்களும் முஸ்லிம்களும் மஹிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்தனர்.ஆனால், மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு மஹிந்த இப்போது போராடி வருகின்றார். அதற்காக அவர் அதே இனவாதத்தை மீண்டும் கையில் எடுத்துள்ளார். அவரது தரப்பினர் குறிப்பாக, விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில போன்றவர்கள் தொடர்ச்சியாக இனவாதக் கருத்துக்களைக் கக்கி வருகின்றனர்.

புதிய அரசை சிறுபான்மை இனங்களுக்கு மாத்திரம் சொந்தமான அரசாகவும் சிங்கள மக்களுக்கு எதிரான அரசாகவும் காண்பித்து சிங்கள மக்களிடையே சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இனவாதத்தை விதைத்து வருகின்றனர். அவர்களுடன் பொது பல சேனாவும் கை கோர்த்துள்ளது.

இந்த இனவாதப் பிரசாரத்தின் ஒரு பகுதியாக ''சிங்கவர்களின் இரத்தம்'' (சிங்கலே) என்ற பெயரில் நாடு பூராகவும் ஸ்டிக்கர் பிரசாரம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதிகமான முஸ்லிம்களின் வீட்டுக் கதவுகளிலும், சிங்களவர்களின் ஓட்டோக்களிலும் இந்த ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன. இந்த ஸ்டிக்கர்கள் பொறிக்கப்பட்ட டி-சேர்ட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

இதனால் முஸ்லிம்கள் மீண்டும் அச்சத்தை எதிர்நோக்கியுள்ளனர். மீண்டும் ஓர் இனக் கலவரம் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சுகின்றனர்.இந்த நல்லாட்சியிலும் இதே நிலைதானா? இதற்காகவா இந்த ஆட்சியை உருவாக்கினோம் என்று கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளில் இறங்குவதற்கு பேரினவாதிகள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டு இருக்கின்றனர். முஸ்லிம்கள் தொடர்பில் ஏதாவது சிறிய அசைவு தென்பட்டால் போதும் உடனே களத்தில் குதித்துவிடுகின்றனர்.

ஜீ. எஸ். பி வரிச் சலுகையை இலங்கைக்கு வழங்குவதற்காக முஸ்லிம் தனியார் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் விதித்த நிபந்தனையை எதிர்த்து இலங்கை தவ்ஹீத் ஜமாஅத் ஆர்ப்பாட்டம் நடத்தியமையை பெரிதுபடுத்தி இந்தப் பேரினவாதிகள் சில நாட்கள் நாடுபூராகவும் முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கினர். பின்பு ஓய்ந்துவிட்டனர்.

இப்போது தம்புள்ள பள்ளிவாசல் மற்றும் தம்புள்ளை நகரில் முஸ்லிம் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற அசம்பாவிதம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் பேரினவாதம் தலை தூக்கியுள்ளது.

தம்புள்ளை பள்ளிவாசலுக்கு எதிரான பேரினவாதிகளின் செயற்பாடுகள் தொடங்கப்பட்டு ஐந்து வருடங்கள் நெருங்குகின்றன. 2012 ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி தம்புள்ளை ரங்கிரிய விகாராதிபதி சிறி சுமங்கல தேரரின் தலைமையில் இந்தப் பள்ளிக்கு எதிரான போராட்டம் தொடக்கி வைக்கப்பட்டது.

அன்றைய தினம் வெள்ளிக்கிழமை அந்தப் பள்ளியில் மக்கள் ஜும்ஆ தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது ஆர்ப்பாட்டக்காரர்களால் அந்தப் பள்ளி தாக்கப்பட்டது. உள்ளே புகுந்து குர் ஆன்கள் உள்ளிட்ட பொருட்களை வெளியே வீசி பிரித் ஓதி தேரர்கள் பெரும் அட்டகாசம் புரிந்தனர்.

ஜும்ஆ தொழுகை இடைநிறுத்தப்பட்டது. பொலிஸார் தொழுகைக்காக அமர்ந்திருந்தவர்களை வெளியேற்றினர். அன்றிலிருந்து அந்தப் பள்ளியை அகற்றும் செயற்பாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக இடம்பெறத் தொடங்கின.

தம்புள்ளை நகரை அழகுபடுத்தல் என்ற பெயரிலேயே பள்ளியை அகற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மறுபுறம், இந்தப் பள்ளி பௌத்த புனித பிரதேசத்துக்குள் அமைந்துள்ளது என்றும் அதை அகற்ற வேண்டும் என்றும் கூறி தம்புள்ளை ரங்கிரிய விகாராதிபதி சிறி சுமங்கல தேரர் போராடி வருகின்றார்.

இறுதியாக,அந்தப் பள்ளியை அகற்றுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் கனரக வாகனங்களுடன் வந்து நின்றனர். பள்ளிக்கு முன்னாலும் பின்னாலும் உள்ள பகுதிகள் அகற்றப்பட்டு இயந்திரங்கள் பள்ளியை நெருங்கியபோது அந்த நடவடிக்கை அரசியல்வாதிகளின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இப்போது அந்தப் பள்ளியை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு பள்ளி நிர்வாகம் இணங்கியுள்ளபோதிலும், அதற்காக அரசால் வழங்கப்படவிருக்கும் காணியின் அளவில் இணக்கம் ஏற்படவில்லை. 80 பேர்ச் நிலத்தை பள்ளி நிர்வாகம் கோருகின்ற போதிலும், விடயத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சர் சம்பிக ரணவக 20 பேர்ச் காணியே வழங்கமுடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்தப் பள்ளிக்கு காணிகளை வழங்க வேண்டாம் என்றும் அதை அங்கிருந்து முற்றாக அகற்ற வேண்டும் என்றும் கூறி பேரினவாதிகள் களத்தில் குதித்துள்ளனர்.இதற்காக அவர்கள் ஓர் இலட்சம் கையெழுத்துக்களை திரட்டும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர்;ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர்.

ஆட்சி மாற்றத்தின் பின் முடிவுக்கு வந்துவிடும் என்று நினைக்கப்பட்ட இந்த விவகாரம் மீண்டும் பழையபடி, சிக்கலுக்குள் சிக்கத் தொடங்கியுள்ளது.இந்த ஆட்சியில் இப்பள்ளி பாதுகாக்கப்படும் என்று அனைவரும் நம்பினர்.ஆனால்,இந்த ஆட்சியில்தான் இந்தப் பள்ளி பறிபோகும்போல் தெரிகின்றது.

மஹிந்தவின் ஆட்சியில் பொது பல சேனா முஸ்லிம்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்யத் தொடங்கியபோது அதைப் பெரிதுபடுத்த வேண்டாம்.அவர்கள் தானாக அடங்கிவிடுவார்கள் என சிலர் கூறினர்.

ஆனால், அதை முளையில் கிள்ளி எறியாததால் அவர்களின் பிரசாரம் மெல்ல மெல்ல வளர்ந்து இறுதியில் அளுத்கமவில் பெரும் கலவரமாக வெடித்தது. இந்த அனுபவத்தைக் கவனத்தில் கொண்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மஹிந்த ஆட்சியில் இருந்ததைப் போல் இந்த ஆட்சியிலும் முஸ்லிம் அரசியல்வாதிகள் மௌனமாகத்தான் இருக்கப் போகிறார்களா? என்ற என்ற கேள்விகளை இப்போது முஸ்லிம்கள் எழுப்பத் தொடங்கியுள்ளனர். தமிழ்-சிங்கள அரசியல்வாதிகள்தான் இந்த அரசிலும் முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுக்கப் போகிறார்களா என்ற கேள்வியும் எழுகின்றது.

மஹிந்தவின் ஆட்சியில் முஸ்லிம் அரசியல்வாதிகள் மஹிந்தவுடன் ஒட்டிக் கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரான அத்தனை இனவாதச் செயற்பாடுகளையும் கைகட்டிப் பார்த்துக் கொண்டு நின்றனர். இந்த ஆட்சியில் எவ்வாறு நடந்து கொள்ளப் போகிறார்கள் என்று பார்ப்போம்.

இந்த நாட்டில் உள்ள அனைத்து முஸ்லிம்களின் ஆதரவுடன் உருவானது தான் இந்த ஆட்சி. தங்களுக்கு எதிரான இனவாத செயற்பாடுகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே முஸ்லிம்கள் இந்த அரசுக்கு ஆதரவு வழங்கினர். அரசு முஸ்லிம்களை ஏமாற்றிவிடக்கூடாது.

ஆகவே, தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்திருக்கும் இந்த இனவாத செயற்பாட்டை அரசு உடன் தடுத்து நிறுத்த வேண்டும். பள்ளியை பாதுகாப்பதற்கு அல்லது பள்ளி நிர்வாகிகள் விரும்பும் இடத்தில் பள்ளியை அமைப்பதற்கு அரசு உதவ வேண்டும்.



# அமைச்சரவை முடிவுகள்

மொரகஹகந்தை, களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாகப் பாதிப்புக்குள்ளாகும் காணி உரிமையாளர்களுக்கு செலுத்தப்படவுள்ள மேலதிக நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளை 2017-2018 காலப்பகுதியில் முழுமையாக செலுத்தி முடிப்பது தொடர்பில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் எனும் ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளை வலுவூட்டுதல் ஆகிய செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காகஜப்பான் நாட்டிடமிருந்து250 மில்லியன் ஜப்பானிய யென் நிதியுதவியினை பெற்றுக் கொள்வதற்கான பரிமாற்றக் குறிப்புக்களில் கைச்சாத்திடுவது தொடர்பில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் எனும் ரீதியில் கௌரவ பிரதமர் ரணில் விக்ரமசிங்கஅவர்களினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

03.இலங்கை நிதித்துறையை நவீனமயப்படுத்தும்.

இலங்கை நிதித்துறையை நவீனமயப் படுத்தும் நோக்கில் நிதித்துறையினை விருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் மூன்றினை செயற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதனடிப்படையில், நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு, தேசிய காப்புறுதிச் சபை, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவற்றின் மூலம் 2017-2022 கால எல்லைக்குள் நிதித்துறையை மேம்படுத்தும் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கும், அதற்காக உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தினால் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை மிகை அளவிலான வசதிகளின் கீழ் பெற்றுக் கொள்வதற்கும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் எனும் ரீதியில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால்; முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

04.காட்டுயானைகளால் ஏற்படும் சேதங்களுக்கான இழப்பீட்டுத் தொகையில் திருத்தம் செய்தல். காட்டுயானைகளால் ஏற்படும் சேதங்களுக்கான இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தனி மனித உயிர் சேதங்களுக்காக செலுத்தப்படும் இழப்பீட்டுத் தொகையினை 200,000 ரூபாவிலிருந்து 500,000 ரூபா வரை அதிகரிப்பது தொடர்பில் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

05.இலங்கை சாரணர் இயக்கத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளல்(விடய இல. 16)

இயற்கை வளப் பேணுகை மற்றும் வனசீவராசிகள் - மனிதர்களுக்கு இடையில் அமைதி நிலையைக் கட்டியெழுப்புதற்கான ஒரு நிலைபேறான தீர்வை ஏற்படுத்துவதற்கு இலங்கை சாரணர் இயக்கத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் பயிற்சி நெறியொன்றினை கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொடர்ச்சியாக 03 வருடகாலம் இலங்கை வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பின் ரந்தெனிகல பயிற்சி நிலையத்தில் நடாத்துவது தொடர்பில் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

06.கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தைத் திருத்தம் செய்தல்.

தொழில்நியாய மன்றுகளின் முன்னிலையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களை பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் ஆஜராதல் என்பவற்றை உள்ளடக்கும் வகையில் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சட்டத்தரணிகள் அல்லாதோர், தொழில் நியாய மன்றுகளின் முன்னிலையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் சார்பாக பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் ஆஜராதல், சட்டத்தரணிகள், தொழில் ஆணையாளர் அல்லது தத்துவமளிக்கப்பட்ட அலுவலரின் முன்னிலையில் நடாத்தப்படுகின்ற விசாரணை நடவடிக்கைகளில் ஆஜராதல் மற்றும், தொழில் நியாய மன்றுகளின் தவிசாளர்களுக்கு தமது உத்தரவுகளை அமுல்படுத்துவதற்கு அதிகாரமளித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக சட்டவரைவைத் தயார் செய்வதற்கு சட்டவரைஞருக்கு அறிவுரை வழங்குவது தொடர்பில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன மற்றும் நீதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

07.இலங்கை தேசிய வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல்.

இலங்கை தேசிய வைத்தியசாலையை நவீன தொழில் நுட்பமிக்க வைத்தியசாலை ஒன்றாக அபிவிருத்தி செய்வதற்காக துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டிய கீழ்க்காணும் தேவைகளை மேற்கொள்வது தொடர்பில் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நோயாளர்களுக்கும் மற்றும் செயற்குழுவினருக்கும் பூரண வசதிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் விக்டோரியா மற்றும் பண்டாரநாயக்க ஆகிய கட்டிடங்களை நவீனமயப்படுத்தல்

பான்ஸ் பிரதேசத்திலுள்ள மருத்துவர்களின் தங்குமிட விடுதிகளை புதுப்பித்தல்

08.கொழும்பு டி சொய்சா மகளிர் வைத்தியசாலையில் சிசுக்களுக்கான நிலையமொன்றை நிறுவல்;

கொழும்பு டி சொய்சா மகளீர் வைத்தியசாலையில் சிசுக்களுக்கான நவீன சிகிச்சை முறைகள் மற்றும் விசேட சிகிச்சை சேவையினை தரமான முறையில் வழங்குவதற்கு ஏதுவான முறையில் சிசுக்களுக்கான நிலையமொன்றை பிரான்ஸ் நாட்டின் நிதியுதவியுடன் குறித்த வைத்தியசாலையில் நிறுவுவது தொடர்பில்சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்னவினால்; அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது. குறித்த செயன்முறை தொடர்பில் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

09.கடன் தகவல் சேவை வழங்குநர்கள் தொடர்பான வரைவு சட்டமூலம்

கடன் தகவல் சேவை வழங்குநர்கள் தொடர்பான வரைவு சட்டமூலத்தினை வர்த்தமானியில் பிரசுரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

10.அரசுடமை விசேட உட்கட்டமைப்பு வசதிகள் கம்பனி ஒன்றின் மூலம் அத்தியவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டத்திற்கான நிதியை வழங்குதல்(விடய இல. 26)

இலங்கை அரசாங்கத்தினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான கம்பனி சட்டத்தின் கீழ் பொது வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக அரசுடமை விசேட உட்கட்டமைப்பு வசதிகள் கம்பனியினை ஸ்தாபிப்பதற்கும், சகல அதிவேக நெடுஞ்சாலைகளின் சொத்துக்களையும், எதிர்காலத்தில் ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள அதிவேக நெடுஞ்சாலைகளின் சொத்துக்களையும் குறித்த கம்பனிக்கு உரித்துடைமையாக்குவதற்கும் குறித்த சொத்துக்களை காட்டி எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள அதிவேக நெடுஞ்சாலைகளுக்கான நிதியினை பெற்றுக் கொள்வதற்காக பிணையாக பயன்படுத்துவதற்குமாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

14.இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள காணியை; கலாசார மத்திய நிலையம் அமைக்க பெற்றது.

இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள ஓர் ஏக்கர் காணித்துண்டொன்றில் கலாச்சார மத்திய நிலையமொன்றை அமைப்பதற்காக இரத்தினபுரி மாவட்ட செயலாளருக்கு ஒதுக்கீடு செய்வது தொடர்பில் மாநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

18.மீனவ பிரஜைகளின் வாழ்வாதார விருத்தி மற்றும் வறுமையினை ஒழித்தல்

மீனவ பிரஜைகளின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்தல் மற்றும் வறுமையினை ஒழித்தல் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்ட 30 வேலைத்திட்டங்களை, 2017ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 1,200 மில்லியன் ரூபாய் நிதியினை பயன்படுத்தி செயற்படுத்துவது தொடர்பில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

23.தேசிய மகளிர் ஆணைக்குழுவினை ஸ்தாபித்தல்.

மகளிர் தொடர்பில் செயற்படுவதற்கு இலங்கையில் பல அமைப்புக்கள் இருந்த போதிலும் பெண்களுக்கு எதிராக தற்போது பெருகி வரும் வன்முறைகளை தடுப்பதற்காக அவற்றுக்கு சட்ட ரீதியிலான அதிகாரம் இல்லை. எனவே சட்ட அங்கீகாரம் பொருந்திய தேசிய மகளிர் ஆணைக்குழுவினை ஸ்தாபிப்பது தொடர்பில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டாரவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடுகுருந்த கடற்பரப்பில் ஏற்பட்ட படகு விபத்தினால் உயிரிழந்த மற்றும் காயமுற்ற நபர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கல. 2017-02-19ம் திகதி, களுத்துறை கடுகுருந்த பிரதேசத்துக்கு அருகிலுள்ள கடற்பரப்பில் ஏற்பட்ட படகு விபத்தினால் உயிரிழந்தவர்களுக்கு 100,000 ரூபா வீதமும், காயமுற்றவர்களுக்கு 20,000 ரூபா வீதமும் நஷ்ட ஈட்டுத் தொகையினை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# டிரம்பின் புதிய 'விசா' சட்டம்
## வெளிநாட்டினர் வெளியேறும் அபாயம்



அமெரிக்காவுக்குள் நுழைய ஈரான், ஈராக், சிரியா உள்ளிட்ட 7 முஸ்லிம் நாடுகளை சேர்ந்தவர்களுக்கு 'விசா' வழங்க ஜனாதிபதி டிரம்ப் உத்தரவு பிறப்பித்தார். அதற்கு அமெரிக்காவில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. அமெரிக்காவில் உள்ள நீதிமன்றங்களும் தடை விதித்தன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திருத்தம் செய்யப்பட்ட புதிய 'விசா' தடை உத்தரவை டிரம்ப் பிறப்பித்துள்ளார். அதில், ஏற்கனவே, அமெரிக்காவில் குடியிருக்கும் வெளிநாட்டினர் ஏதாவது சிறிய குற்ற செயல்களில் ஈடுபட்டாலோ, எல்லை தாண்டி வந்தாலோ கைது செய்யப்பட்டு வெளியேற்றப்படுவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

இதனால் லட்சக்கணக்கான வெளிநாட்டினர் வெளியேற்றப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது அமெரிக்காவில் தங்கியிருக்கும் வெளிநாட்டினர் மீது நடத்தப்பட உள்ள மறைமுக தாக்குதலாகக் கருதப்படுகிறது.

# பங்குச்சந்தை தலைவராக சவூதியில் பெண் நியமனம்



சவுதி அரேபியாவில் பங்குச் சந்தையின் தலைவராக பெண் ஒருவர் நியமிக்கப்பட்ட ஒரு வாரத்திற்கு பிறகு, அந்நாட்டின் முக்கிய வங்கி ஒன்று பெண் ஒருவரை அதன் தலைமை நிர்வாகியாக நியமித்துள்ளது.

சம்பா நிதிய குழு, ரனியா மகமத் நஷார், அதன் தலைமை நிர்வாகியாக பணியில் நியமிக்கப்பட்டார் என்று தெரிவித்தது.

மூன்று நாட்களுக்கு முன்னர், சரா அல் சுஹைமி சவுதி பங்கு சந்தையின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

வீழ்ச்சியடைந்து வரும் எண்ணெய் விலைகளை சரி செய்ய இலக்கு வைக்கப்பட்டுள்ள பொருளாதார சீர்திருத்தங்களின் ஒரு பங்காக, பணிகளில் அதிக பெண்களை நியமிக்க சவூதி அரேபியா முயற்சித்து வருகிறது

ஆனால் சௌதியின் பெண்கள் தங்களின் பல செயல்களுக்கு கணவன் அல்லது ஆண் உறவினரின் அனுமதியை பெறும் பாதுகாவல் அமைப்பின் கீழ்தான் வாழ்ந்து வருகின்றனர்.

## உலகச் செய்திகள்

# பிரித்தானிய முஸ்லிம் ஆசிரியருக்கு அமெரிக்காவில் நுழைய தடை



அமெரிக்காவுக்கு பயணிக்க பிரித்தானியா ஆசிரியர் ஒருவருக்கு அனுமதி மறுக்கப்பட்டு விமானத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வேல்ஸ் பகுதியை சேர்ந்த துரா ஆடியா என்ற முஸ்லிம் ஆசிரியருக்கே அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கணித ஆசிரியரான இவர் பள்ளி குழந்தைகளுடன் நியூயோர்க் நகரத்திற்கு சுற்றுலா செல்ல விமானத்தில் ஏறியுள்ளார். அப்போது, விமானம் புறப்படும் முன் பாதுகாப்பு அதிகாரிகள் துரா ஆடியா ஐ விமானத்திலிருந்து வெளியேற்றியுள்ளனர்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, என்னை எதற்காக வெளியேற்றினார்கள் என்பதை கண்டிப்பாக விளக்க வேண்டும். அதுவரை நான் விட மாட்டேன். என்னை விமானத்திலிருந்து வெளியேற்றும் போது குழந்தைகள் உட்பட அனைவரும் என்னை பார்த்தனர். அது மிகவும் வருத்தமாக இருந்தது என தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து அடியில் போர்ட் டால்போட் கவுன்சிலும் விளக்கம் கேட்டுள்ளது.

7 முஸ்லிம் நாடுகள் மீதான தடை உத்தரவுக்கு அமெரிக்க நீதிமன்றம் தடை விதித்தது. இதையடுத்து அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் புதிய தடையை பிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

துராநட ஆடியா பிரித்தானியாவை சேர்ந்தவர் என்றாலும் அவரது குடும்பத்தினர் வங்கதேசத்தில் வசித்து வருகின்றனர். ஆனால், டிரம்ப் தடை செய்த 7 முஸ்லிம் நாடுகள் பட்டியலில் வங்கதேசம் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பாவுக்கு செல்ல முயன்ற லிபிய அகதிகள் பலி



ஐரோப்பாவுக்கு படகில் தப்ப முயன்ற 74 அகதிகள் லிபியா அருகே கடலில் மூழ்கி இறந்தனர்.

ஆபிரிக்கா நாடான லிபியாவில் நிலவும் அரசியல் நிலையற்ற சூழ்நிலையால் அந்த நாட்டு மக்கள் வெளியேறி அண்டை நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர். இதில் பெரும்பாலானவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு படகுகள் மூலம் சென்று அங்கு சட்டவிரோதமாக குடியேறுகின்றனர்.

இவ்வாறு படகில் செல்லும் போது அவ்வப்போது கடலில் மூழ்கி அவர்கள் பலியாகும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. மேலும் பலர் உயிருடன் மீட்கப்பட்டு உள்ளனர். லிபியா மக்கள் அகதிகளாக செல்வதை தடுக்க அந்த நாட்டு கடலோர காவல் படை பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டும் எந்தப் பலனும் இல்லை.

இந்த நிலையில் லிபியாவின் மேற்கு பகுதியை சேர்ந்த ஏராளமானோர் ஒரு படகில் மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பாவுக்கு தப்ப முயன்றனர். ஆனால் மோசமான வானிலை காரணமாக அந்த படகு உடைந்து கடலில் கவிழ்ந்தது.

பின்னர் அந்த படகு லிபியா நாட்டின் மேற்கு கடற்கரை பகுதியில் ஒதுங்கியது. அந்த படகுடன், 74 பேரின் உடல்களும் கரை ஒதுங்கின. இதுபற்றி தகவல் அறிந்த மீட்பு படையினரும், செஞ்சிலுவை சங்கத்தினரும் அங்கு விரைந்து சென்று இறந்தவர்களின் உடல்களை மீட்டனர்.

### பனிச் சிற்ப திருவிழாவில்
# ஜேர்மன் வீரர் சாகசம்



சீனாவில் பனிக்கட்டிகளால் வடிவமைக்கப்பட்ட சிற்பங்களுக்கு நடுவே கை பிடிமானமின்றி தாவிக்குதித்தபடியே வலம் வந்த வீரர் பார்வையாளர்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்தார். ஹற்பின் நகரில் தொடங்கிய பனிச்சிற்ப திருவிழாவில் தான் இந்த சாகசம் அரங்கேறியது. மாளிகைகள், சீன வரலாற்று நாயர்களின் உருவங்கள், இயற்கையின் அழகை கண்முன் நிறுத்தும் வடிவங்கள் என பத்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பனிச்சிற்பங்கள் இந்த திருவிழாவில் இடம்பெற்றுள்ளன.

இதில் ஜேஸன் பால் என்ற ஜேர்மனி தடகள வீரர் கைகளில் எவ்வித உபகரணங்கள் இன்றி தாவிக்குதித்தபடி பனிச்சிற்பங்களை கடந்து சென்ற காட்சி பார்வையாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. 25 டிகிரி செல்சியஸுக்கும் குறைவான வெப்ப நிலையில் ஜேஸன் பால் நிகழ்த்திய சாகசங்களுக்கு கை கொடுத்தது அவரது பிரத்தியேக ஷூ மட்டுமே. அந்த ஷூவின் அடியே தைக்கப்பட்டுள்ள ஆணிகள், சாகசத்திற்கு நடுவே அவரது உடலை சமநிலைப் படுத்தியது.

# பயங்கரவாதத்தை தடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்
### சீனாவிடம் இந்தியா வலியுறுத்தல்



எல்லை தாண்டிய தீவிரவாதத்தை தடுக்க சீனா சிறப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி-யிடம் இந்திய வெளியுறவு செயலர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார். பயங்கரவாதத்தை தடுக்க சீனா மேலும் நடவடிக்கைகள் எடுக்கும் என நம்புகிறோம்.

# துபாயில் முதன் முறையாக 63 வயதில் குழந்தை பெற்ற பெண்



கணவன், மனைவியாக வாழும் தம்பதிக்கு அவர்கள் வாழ்வில் குழந்தை பாக்கியம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. பெரும்பாலானவர்கள் குறிப்பிட்ட வயதிற்குள் தாயாகவும், தந்தையாகவும் ஆகிவிடுகின்றனர்.

ஆனால் ஒரு சிலருக்கு அப்பாக்கியம் அமைவதில்லை. அவர்களில் மிகவும் அரிதானோர் மிக வயதான காலத்தில் குழந்தை பாக்கியம் பெறுகின்றனர்.

அது போன்ற அதிசய நிகழ்வு சமீபத்தில் துபாயில் ஏற்பட்டது. இலங்கையை பூர்வீகமாக கொண்ட 63 வயதுப் பெண் குழந்தை பெற்ற அரிய சம்பவம் நடந்தது.

இப்பெண்ணுக்கு ஏற்கனவே முதல் கணவர் மூலம் செயற்கை கருத்தரிப்பு முறையில் 13 வயதில் குழந்தை உள்ளது. தற்போது 2-வது திருமணம் செய்த அவர் சென்னையில் செயற்கை கருத்தரிப்பு முறை மேற்கொண்டார்.

தற்போது அவருக்கு துபாயில் குழந்தை பிறந்துள்ளது. தாயும் குழந்தையும் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளனர். குழந்தை 2.25 கிலோ எடை உள்ளது. இப்பெண்ணுக்கு டாக்டர் ஜாக்ரட் நிர்மலா பிரசவம் பார்த்தார். ஆனால் தம்பதியின் பெயர் வெளியிடப்படவில்லை.

கடந்த ஆண்டு அரியானாவை சேர்ந்த தவிஞ்சர் கவுர் என்ற பெண் செயற்கை கருவூட்டல் முறையில் குழந்தை பெற்றார். அதே போன்று தற்போது இவரும் குழந்தை பெற்று இருக்கிறார்.

பொதுவாக் 60 வயதுக்கு மேல் பெண்கள் குழந்தை பெறுவது மிகவும் ஆபத்தானது என டாக்டர்கள் தெரிவிக்கின்றனர். ஏனெனில் 40 வயதுக்கு பிறகு அவர்கள் மிக மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள்.

# நம்பிக்கை வாக்கெடுப்பு செல்லாது என அறிவிக்கக் கோரி மனு:
### கேள்வி கேட்டு திணறடித்த நீதிபதிகள்



தமிழக சட்டப்பேரவையில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பு செல்லாது என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த நீதிபதிகள், ஸ்டாலின் தரப்பிடம் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினர்.

நம்பிக்கை வாக்கெடுப்பு செல்லாது என்று அறிவிக்கக் கோரி ஸ்டாலின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை இன்று காலை சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஸ்டாலின் தரப்பில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கேட்ட நீதிபதிகள், எம்எல்ஏக்களை யார் அடைத்து வைத்தது? விருப்பத்துக்கு மாறாக அடைத்து வைத்தது ஏன்? என்று கேள்வி எழுப்பினர்.

மேலும், அதிமுக எம்எல்ஏக்களை கட்டாயப்படுத்தி நம்பிக்கை வாக்கெடுப்பில் வாக்களிக்க வைத்ததற்கு ஆதாரம் உள்ளதா என்றும் கேட்டனர்.

அத்தோடு, இந்த வழக்கில் பன்னீர்செல்வத்தை எதற்காக எதிர் தரப்பினராக சேர்த்தீர்கள் என்று நீதிபதிகள் கேட்டதற்கு, அதிமுகவில் நிலவும் பிரச்சினைகளுக்கு அவரும் காரணம் என்றும் திமுக தரப்பு தெரிவித்தது.

இதையடுத், பேரவை நிகழ்வுகளின் விடியோ ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு ஸ்டாலின் தரப்புக்கு நீதிபதிகள் உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை 27ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

மேலும், மதுரை கிளை நீதிமன்றத்தில் இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவும் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

# உண்மையான ஜூராசிக் பார்க் சீன நாட்டில் கண்டுபிடிப்பு



சீனாவின் ஷெய்ஜங் மாகாணத்தில் உண்மையான ஜூராசிக் பார்க் இருந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். சுமார் 65 முதல் 145 மில்லியன் ஆண்டுகள் பழைமையான டைனோசர் படிமங்கள் மற்றும் வரலாற்றுக்கு முந்தைய எட்டு விலங்கு இனங்களை ஆய்வாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.

மொத்தம் 82 டைனோசர் படிம தளங்கள், ஆறு டைனோசர் இனம் மற்றும் 25 வகையான படிம டைனோசர் முட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்யதுள்ளனர். ஷெய்ஜங் ஹைட்ராலஜி மற்றும் ஜியோலஜி நிறுவனத்தை சேர்ந்த ஆய்வாளர் குழுவினர் இத்தகவலை உறுதி செய்துள்ளனர்.

ஷெய்ஜங் பகுதியை சேர்ந்த 11,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் எட்டு புதிய டைனோசர் இனங்கள், படிமங்கள் உள்ளிட்டவை கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஷெய்ஜங் பகுதியில் அதிக டைனோசர்கள் வாழ்ந்தது நிரூபிக்கப்பட்டுள்ளதாக ஷெய்ஜங் அருங்காட்சியகத்தின் துணை பொறுப்பாளர் ஜின் சிங்ஷெங் தெரிவித்துள்ளார்.

# சீன போர்க் கப்பல் ஒத்திகையால் இந்திய பெருங்கடலில் பதற்றம்



உலகின் அதிகமான மக்கள் தொகையை கொண்ட பெரிய நாடாக அறியப்படும் சீனா, ஆயுத பலத்திலும் இந்தியாவை மிஞ்சி நிற்க வேண்டும் என்ற நோக்கத்தில் இராணுவத்துறையில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மேலும், இந்திய பெருங்கடல் பகுதி முழுவதையும் தனது கட்டுப்பாடு மற்றும் ஆதிக்கத்தின்கீழ் அடக்கியாள்வதிலும் முனைப்புகாட்டிவரும் சீனா, தங்கள் உள்நாட்டு பாதுகாப்பு மட்டுமின்றி, இந்திய பெருங்கடல் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் கடமை எங்களுக்கு உண்டு என்று சமீபத்தில் தெரிவித்திருந்தது.

இதனை செயல்முறையில் நிரூபிக்கும் விதமாக சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் கடற்படையை சேர்ந்த போர்க் கப்பல்கள் இலங்கையின் கொழும்பு துறைமுகம் பகுதிக்கும், பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சீனா நாட்டின் கடற்படையை சேர்ந்த போர்க் கப்பல்கள் இந்திய பெருங் கடல் பகுதியில் நேற்று முன்தினம் திடீர் ஒத்திகையில் ஈடுபட்டதாக அந்நாட்டின் பிரபல ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தியாவின் 'கொல்லைப்புறம்' என கருதப்படும் இந்திய பெருங்கடல் பகுதியில் முன்னறிவிப்பின்றி சீனா நடத்தியுள்ள இந்தப் போர் ஒத்திகை தெற்காசிய தீபகற்பத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது, குறிப்பிடத்தக்கது.

## தம்புள்ளை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இடம்பெற்ற போது தம்புள்ளை நகரில் சென்று கொண்டிருந்த முஸ்லிம் பெண்ணிடம் பெரும்பான்மை இனத்தவர்கள் பலவந்தமாக கையெழுத்து வாங்கியுள்ளனர். தன்னிடம் பலவந்தமாக கையெழுத்து வாங்கியமை தொடர்பில் குறித்த பெண்மணி தம்புள்ளைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தம்புள்ளைப் பள்ளிக்கு காணி வழங்க வேண்டாமென கடந்த 19ஆம் திகதி கையெழுத்து திரட்டும் பணி பெரும்பான்மை இனத்தவர்களால் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## படகு விபத்தில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)



மயானத்தில் ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீர் அஞ்சலியுடன் அடக்கம் செய்தனர்.

சீனன் கோட்டை பள்ளிச் சங்க இணைச்செயலாளர் அல்ஹாஜ் எம்.எம். ஷிகாப் உள்ளிட்ட முஸ்லிம் பிரமுகர்கள் பூதவுடல்களை தாங்கிச் சென்றனர்.

சீனன் கோட்டை பிரதேச முஸ்லிம்கள் சமயக்கிரியைகளில் பங்குபற்றிய மக்களுக்கு 2500 தண்ணீர் போத்தல்கள் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

இறுதிக்கிரியைகளில் அமைச்சர்கள், மதகுருமார்கள், உள்ளிட்ட பிரமுகர்களும் ஆயிரக்கணக்கான மக்களும் பங்குபற்றினர்.

கண்டி மாவட்ட இணைப்புக்குழு கூட்டம் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவின் தலைமையில் கீழ் கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது மாவட்டத்தின் பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக விளக்கமளிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்.

இந்த அமைப்புக்க பிக்குகளின் தலைமையில் இயங்கினாலும் மல்வத்த, அஸ்கிரிய பீடங்களில் மகாநாயக்கர்களோ தம்புள்ள பிரதம தேரரோ இதற்கு சம்பந்தப்படவில்லை. எங்கிருந்தோ வந்த பிக்குமார் தமது அமைப்பில் 18000 மேற்பட்ட அங்கத்தவர்கள் இருப்பதாகக்கூறிக்கொண்டு இவற்றை செய்கின்றார்கள்.

ஆனால் பொலிஸ் அறிக்கையின் படி இவர்களின் தரவுகள் பொய்யானவை கடந்த வாரம் இவர்கள் தம்புள்ளையில் கையெழுத்துவேட்டை ஆரம்பித்துள்ளனர். ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டோர்கள் கையெழுத்து பெறுவதன் மூலம் தம்புள்ளையில் தம்புள்ளையில் பள்ளிவாசல் கட்டுவதை தடை செய்வோம் எனக்கூறினர். இந்த நாட்டின்யாப்பின் படி மக்கள் விரும்பும் மதத்தை பின்பற்ற உரிமைக்கு இருக்கின்றனது.

இதை தடை செய்ய எவராலும் முடியாது. கடந்த வாரம் தவுளகலவையில் ஒரு முஸ்லிம் ஒருவரும் சொந்தமான காணியில் ஒரு இனவாத அமைப்பு புத்தர் சிலை கொண்டுவந்த வைத்துள்ளனர். அந்த இடத்தில் பள்ளிவாசல் ஒன்று கட்ட போகின்றார்கள் என்பதனாலேயே நாங்கள்

சிலையை அமைத்தோம் எனக்கூறுகிறார்கள். இது விடயமாக அந்த ஊரின் பள்ளிவாசலில் விசாரித்த போது அங்குள்ள மௌலவி இப்போதுள்ள பள்ளிவாசலுக்கு மக்கள் போதாது இதற்கு மேல் பள்ளிவாசல் அவசியமில்லை நாங்கள் அவ்வாறு பள்ளிவாசல் கட்டுவதற்கு நினைக்கவில்லை எனக்கூறினார்.

எனவே இது முஸ்லிம்களுக்கெதிராக கலவரத்தை தூண்டக்கூடிய நிகழ்வாகவே கருத வேண்டியுள்ளது. கண்டியில் இன்னுமொரு பள்ளிவாசல் அமைந்துள்ளது. அங்கு வீதியின் பெயர்ப்பலகையை உடைத்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளை பார்க்கும் போது இவர்களின் நோக்கம் அமைதியான நகரில் இனக்கலவரத்தை உண்டாக்குவதாகும்.

இவற்றிற்கு எங்களிடம் மருந்து உள்ளது. எனினனம் சிக்கிலாக்கி கொள்ளமால் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள முயற்சிக்கிறோம். தவுலாகலவில் உள்ள விஹாரையில் உள்ள பிரதான தேரரும் பள்ளிவாசல் மௌலவியும் சேர்ந்து கதைத்து பிரச்சினைக்குரிய இடத்தில் எல்லா இனங்களும் பாவிக்கக்கூடியவகையில் ஒரு சனசமூக நிலையம் கட்டவுள்ளார்கள். உண்மையிலேயே கண்டி மாவட்ட பள்ளிவாசல் மௌலவிமார் எமக்கு உதவுகிறார்கள். ஆனால் பள்ளிவாசலுக்குள்ளும் இரண்டு குழுக்கள் பிரிந்து செயற்படுவதாக தகவல கிடைத்துள்ளன.

## பயங்கரவாத தடை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் மங்கள சமரவீர நேற்றைய தினம் பாராளுமன்றில் தெரிவித்தார்.

அத்தோடு, நாட்டின் இனப்பிரச்சினை மற்றும் யுத்தத்தின் பின்னரான விடயங்கள் தொடர்பிலான அரசின் செயற்பாடுகள் நாட்டு மக்களுக்காகவே செய்யப்படுகின்றனவே ஒழிய சர்வதேச அழுத்தங்களுக்கு பணிந்தல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனால் நேற்று பாராளுமன்றுக்கு கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் வருமாறு,

1972 -1978 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புகளின் இல்லாத கருத்தொருமித்த தன்மை இந்த புதிய அரசியலமைப்பில் காணப்படுகின்றது. இதன்மூலம் இலங்கை வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுதும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாட்டு மக்களும் சமாதானத்தை விரும்பும் காரணத்தினால் தான் தமிழ்க்கட்சியொன்றை எதிர்க்கட்சியாக்கி அரசமைப்பு ஸ்தாபிப்பு விடயத்திலும் அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்புக்களையும் நாம் பெற்றுக்கொள்கிறோம்.

அரசமைப்பு விடயத்தில் சிங்கள மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தீர்வினை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் கூறியுள்ளார். பிளவுபடாத நாட்டில் அதிகாரப் பகிர்வினையே அவர்கள் விரும்புகிறார்கள்.

நாம் எந்தக் கட்சியாக இருந்தாலும் மக்களின் பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தவகையில், அடுத்தவருடம் கொண்டாடப்படவுள்ள 70 ஆவது சுதந்திரத் தினத்துக்கு முன்னர் புதிய அரசமைப்பைக் கொண்டுவந்து சிறுபான்மையின மக்களுக்கும் சிறப்புரிமைகளை வழங்க வேண்டும் என்பதே எமது அரசின் நோக்காக இருக்கின்றது.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் இலங்கை நிலைப்பாடு குறித்து, நாட்டு மக்களிடையே பயத்தை ஏற்படுத்தும் விதத்தில் சிலர் தற்போது செயற்பட்டுவருகின்றனர். யுத்தத்தின் பின்னரான தீர்வு, நிலைமாறுகால நீதியைப் பெற்றுக்கொடுக்கும் செயன்முறையைத் தான் நாம் முன்னெடுத்து வருகின்றோமே ஒழிய சர்வதேச அழுத்தம் காரணமாக இவற்றை மேற்கொள்ளவில்லை.

பொறுப்புக்கூறல், மீள நிகழாமை, நிலையான சமாதானம் ஆகியவை தொடர்பில் மிகவும் அவதானமாக உள்ளோம் என்றார்.

அதேநேரம், பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பிலான சட்டமூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவுக்கு தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நகலொன்றை அமைத்து நாம் பாராளுமன்றில் சமர்ப்பிப்போம் எனறும் அமைச்சர் மங்கள கூறினார்.

## முஸ்லிம்களுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அச்சுறுத்தலாகவுள்ளது. இந்த அமைப்புக்கள் முஸ்லிம்களுக்கெதிராக இரவு வேளைகளில் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்துவது முஸ்லிம்களின் சின்னங்களை அழிப்பதும் முஸ்லிம்களுக்கு எதிரான மகஜர்களில் கையொப்பம் சேர்க்கும் வேலைகளை மேற்கொண்டு கலவரங்களை ஏற்படுத்தி அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் அபகீர்த்தியை ஏற்படுத்த முயற்சி செய்கிறது என மத்திய மாகாண பிரதிப்பொலிஸ் மா அதிபர் மஹிந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

## பகிடிவதை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து தெரிவித்த அவர்,

ஒழுக்கப் பண்புகளுடன்கூடிய அநேக பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் ஒரு சிறுபிரிவினரால் அசாதாரணமான முறையில் செயற்படுத்தப்படும் பகிடிவதையைத் தடுப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகங்களுடன் இணைந்து விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்.

பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்காலம் குறித்து அரசாங்கத்திற்கு பொறுப்பு உள்ளது. இதனை குறைபாடுகளின்றி அரக நிறைவேற்றிவரும் நிலையில் முறையற்ற நடவடிக்கைகளுக்கு பல்கலைக்கழகங்களில் இடமளிக்கமுடியாது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானபீட மாணவர்களினால் புதிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அசாதாரணமான பகிடிவதை, இலவச கல்வியின் ஒரு சாபக்கேடு. இந்நிகழ்வு தொடர்பாக நான் கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் விசாரணை மேற்கொண்டதுடன் மிலேச்சத்தனமான இச்சம்பவம் குறித்து அரசாங்கம் வருத்தம் தெரிவிக்கின்றது.

கல்விமான்கள் மற்றும் மேதைகளை உருவாக்கும் பல்கலைக்கழகத்தின் கௌரவத்தை பாதிக்கும் இவ்வாறான செயல்கள் இலவசக்கல்விக்கு செய்யப்படும் அவமதிப்பாகும். எமது நாட்டின் 40-50 வருடகால பல்கலைக்கழக வரலாற்றில் பகிடிவதை தொடர்பாக கரும்புள்ளிகள் காணப்படுவதோடு பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படும் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அவர்களது பெற்றோரின் நிம்மதியை துயரக்கண்ணீராக மாற்றும்வகையில் மாணவர்கள் செயற்படக்கூடாது என தெரிவித்தார்.

கல்லூரி வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட மத்துகம ஆனந்த தேசிய பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும், முன்னாள் நிதி மற்றும் நீதி பிரதி அமைச்சருமான தயா டி பெஸ்குவெல் சிலையும், நினைவுப்பலகையும் ஜனாதிபதியால் திரைநீக்கம் செய்யப்பட்டது. மேலும், கல்லூரியின் புதிய தொழில்நுட்ப ஆய்வுகூடமும் இதன்போது ஜனாதிபதியால் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, ராஜித சேனாரத்ன, பிரதியமைச்சர் பாலித்த தெவரப்பெரும, முன்னாள் அமைச்சர் குமார வெல்கம உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், பாடசாலையின் அதிபர் ரந்துன் ஜயலத், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

## கந்தளாய்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அரசாங்கமோ மீன் பிடிக்க எந்தவித தடை உத்தரவும் பிறப்பிக்காத பட்சத்தில் குறிப்பிட்ட ஒரு சில விஷமிகள் மாத்திரமே இவ்வாறான ஈனச்செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும், நேற்றைய தினம் (21) மீன் பிடிக்கச் சென்ற ஒருவரை அடித்து குளத்தில் வைத்துத் தாக்கிய சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளதாகவும் கந்தளாய் பிரதேச முஸ்லிம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம் மீனவர்கள் மீது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் கம்பு தடிகளால் அடித்து மற்றும் கற்களால் எறிந்து தாக்கியுள்ளார்கள். தாக்குதலுக்குள்ளான இரண்டு முஸ்லிம் மீனவர்கள் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருக்கும் எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அன்வர் நிலைமையைச் சுமூக நிலைக்குக் கொண்டு வந்ததோடு, மூன்று மாதங்களுக்குத் தற்காலிகமாக மீன்பிடிக்க அனுமதியும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ இதற்கான சரியான தீர்வைப் பெற்றுக் கொடுக்காத பட்சத்தில் இவ்விடயம் இரண்டு இனங்களுக்கிடையிலான பிரச்சினையாக மாறலாமெனவும், இதற்கான சரியான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன்வருமாறும் பிரதேச வாழ் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஐ.ம.சு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தாம் சுயாதீனமாக செயற்படுவதற்கான சிறப்புரிமைகளை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தது.

பாராளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுதாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று, விசேட அறிவிப்பு ஆகியன முடிவடைந்த பின்னர் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல்வீரவன்ச எம்.பி. ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார்.

அதாவது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடனான அரசியல் ரீதியான உறவுகளை எமதுகட்சி துண்டித்துள்ளது. ஆகவே, எமது தேசிய சுதந்திர முன்னணியிலுள்ள ஐந்து எம்.பிக்களையும் சுயாதீன அணியாக செயற்படுவதற்கு அனுமதிக்குமாறு நாம் 6 மாதங்களுக்கு முன்னரே கேட்டிருந்தோம்.

சுயாதீனமாகச் செயற்படும் கட்சியொன்றுக்கு பாராளுமன்றில் வழங்கப்படும் உரிமைகள், சலுகைகளையும் நாம் கோரியிருந்தோம். ஆனால், சபாநாயகர் என்ற ரீதியில் நீங்கள் இன்னும் எவ்வித அறிவிப்பையும் விடுக்கவில்லை என்று விமல் எம்.பி. தெரிவித்தார்;.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், இதுவிடயம் தொடர்பில் நாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அறிவித்திருந்தோம். இந்த முடிவு குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு நீங்கள் இன்னும் அறிவிக்கவில்லையென்று அறிவிக்கப்பட்டது. அத்துடன், இன்று தான் (நேற்று) நீங்கள் இப்படியொரு அறிவிப்பையே விடுக்கின்றீர்கள் என்றுக் கூறினார்.

இதற்கு, இல்லை. சபாநாயகரே, இதற்கு முன்னரே நான் கோரிக்கை விடுத்திருந்தேன். நாம் வெளியேறுவதை அனுமதிக்க முடியாது என்றுதான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூறியுள்ளது. அதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. சுயாதீனமாகச் செயற்படும் உரிமை எமக்குள்ளது என்று விமல் குறிப்பிட்டார்.

இதன்போது ஒருங்கிணைந்த எதிரணியின் உறுப்பினர்களான பந்துல குணவர்தன, வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் விமலின் கருத்தை நியாயப்படுத்தி அவருக்கு சார்பாக கருத்து வெளியிட்டனர்.

இதன்போது எழுந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஐக்கிய தேசியக் கட்சியின்கீழ் போட்டியிட்டதால் கடந்த தடவை எமது கட்சிக்கு பாராளுமன்றில் தனிக்கட்சிக்குரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. அறிவிப்புகளைகூட விடுக்கமுடியாத சூழ்நிலை எமக்கு ஏற்பட்டது என சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு இந்த விடயம் தொடர்பில் சபையில் சர்ச்சை எழுந்தபோது, கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி முடிவொன்று அறிவிக்கப்படும் என்று சபாநாயகர் கூறினார்.

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபடவுள்ளதாக எப்ரியல் இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டாளர் ரவீந்திர டீ சில்வா தெரிவித்தார்.

வடக்கு மக்கள் முகங்கொடுத்துவரும் காணி பிரச்சினை, காணாமல் போனோர், மீள்குடியேற்றம் போன்ற விடயங்களை ஜனாதிபதி செயலகம், மீள்குடியேற்ற அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றில் தகவல்களைக் கேட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கிலிருந்து 5 மாவட்டங்களைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் கொழும்பு வந்து தமக்கு நீதிகோரவுள்ளனர். ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டுவிட்டு, பாதுகாப்பு, மீள்குடியேற்ற அமைச்சுகளில் தகவல் அறியும் சட்டமூலத்தின் அடிப்படையில் தகவல்களைக் கோரவுள்ளனர்.

மீள்குடியேற்ற அமைச்சில் 10,600 ஏக்கர் காணி விடுப்பு தொடர்பாக தகவல் கோரவுள்ளனர். பாதுகாப்பு அமைச்சில் 4000 ஏக்கர் காணியில் இராணுவம் விடுவித்ததாகக் கூறும் 3200 ஏக்கர் காணி குறித்தும், விடுவிக்கப்படவுள்ள 800 ஏக்கர் காணி குறித்தும் தகவல் கோரவுள்ளனர். இதேநேரம், 65,000 வீட்டுத் திட்டத்திற்கு எவ்வாறு விண்ணப்பங்கள் பெறப்பட்டன, தெரிவுசெய்யப்பட்டவர்கள் யார், தெரிவதற்கான தகைமைகள் குறித்தும் இவர்கள் தகவல் கோரவுள்ளனர்.

## சைடம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க அரசிடம் நேற்று கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றில் நேற்றைய தினம் நிலையியற்கட்டளை 23 இன் கிழ் 2 இல் விசேடக் கூட்டொன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சைட்டம் பிரதானி மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் பிரதான ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டன. சைட்டத்துக்கு எதிரானர்களால் தான் இது மேற்கொள்ளப்பட்டது என்றும் சில அமைச்சர்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

அடையாளம் தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இதனை செய்ய அரசு தவறுமாக இருந்தால் இதன் பின்னணியில் அரசு இருக்கின்றது எனும் சந்தேகமே ஏற்படும். இந்த சம்பவம் தொடர்பில் உண்மையை கண்டறிய வேண்டியது அரசின் கடப்பாடாகும்.

அந்தவகையில், சம்பவம் தொடர்பான விசாரணைகள் தற்போது எந்த கட்டத்தில் இருக்கின்றன? இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ள விடயங்களை எவை? சம்பவம் தொடர்பில் சந்தேகம் இருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது உண்மையா? துரிதமாக விசாரணை நடத்தப்பட்டு உண்மை நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படுமா? போன்ற கேள்விகளுக்கு அரசு உடனடியாக பதில் வழங்க வேண்டும் என்றார்.

மேற்படி கேள்விகளுக்கு பதிலளித்த சபைமுதல்வாரன அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, இன்று இதற்கான பதிலை சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சரான சாகல ரத்நாயக்க தெரிவிப்பார் என்றுக் கூறினார்.

## கேப்பாப்புலவு,...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரச்சினைகளுக்கு ஏன் தீர்வு வழங்க முடியாதென்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி கேள்வியெழுப்பினார்.

கேப்பாபுலவு மக்களின் 20 நாட்களுக்கு மேலான ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னாள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடுகளுக்கு காணிகளை வழங்குவதற்கு எதிராக கோஷமிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் சீனாவுக்கு காணி மேலதிகமாக காணிகளை வழங்க தயாராக உள்ளதாகவும், தேசிய பிரச்சினைகளான கேப்பாபுலவு, வில்பத்து, தம்புள்ளை போன்ற பிரச்சினைகளில் மௌனம் சாதிப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் தற்போது அவர்களின் பிரச்சினைகளுக்கு செவி சாய்ப்பதில்லை. உரிமைகளுக்காக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்களிலும் பயனில்லை. மக்கள் பிரச்சினைகளும் தீர்ந்தபாடில்லை. 'ணாமி வீட்டுத் திட்டங்களுக்கு இந்த அரசாங்கத்திலாவது விடிவு கிடைக்கும் என்று எதிர்பார்த்த மக்களுக்கும் ஏமாற்றமொன்றே எஞ்சியுள்ளது. அப்பாவி தமிழ் மக்கள் காணிகளில் இராணுவத்தை குடியமர்த்தியுள்ளனர்.

பூர்வீக காணிகளுக்கு மீளச் செல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் வாடும் மக்களுக்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்- என்றார்.

## கல்விமான்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆணைக்குழுக்களிலும் பணி புரிந்தவருமான தேசமான்ய கலாநிதி ஏ.எம்.எம். சஹாப்தீன் (91) காலமானார்.

கம்பளை கஹட்டபிடியை பிறப்பிடமாகக் கொண்ட இவர், 1949 இல் இலங்கைப் பல்கலைக்கழத்தில் பொருளாதாரம் மற்றும் தத்துவப் பாடத்தில் சிறப்புச் சித்தி பெற்று, 1950 இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து, பல்வேறு பதவிகளை வகித்தார். இவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் தத்துவப் பிரிவின் தலைவராகவும் பணி புரிந்துள்ளார்.

ரோயல் ஒலிபரப்பு ஆணைக்குழுவின் அங்கத்தவராக இருந்த இவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை உருவாகுவதற்கு முக்கிய பங்களிப்புச் செய்தவராவார்.

சிபானி ஜுவலர்ஸ் உட்பட பல்வேறு தொழில் முயற்சிகளின் தலைவராக இருந்த இவர், ஏ.எம்.எம். சஹாப்தீன் நம்பிக்கை நிதியத்தை உருவாக்கி, அதன் மூலம் பல்வேறு கல்வி நிறுவனங்களின் அபிவிருத்திக்கு நிதி உதவிகளையும் கட்டடங்களையும் நிர்மாணித்துக் கொடுத்தார். நாரம்மல குருவிகொடுவபவாமுனவில் சஹாப்தீன் கல்வி நிறுவகத்தை அமைத்து பெருந் தொகையானோர் உயர்கல்வி பெற வழி

சமைத்தார். இவருக்கு அரசாங்கம் தேசமான்ய பட்டம் வழங்கி கௌரவித்தது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், சீனன் கோட்டையின் பிரபல மாணிக்க வியாபாரி மர்ஹும் எஸ்.எம். ஜாபிர் ஹாஜியாரின் மகளான ஹாலிதா ருகையாவின் அன்புக் கணவருமாவார்.

இவரது மருமகன் டாக்டர் ஹிலாலி நூர்தீன் பிரித்தானியா ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கத் தலைவராக தெரிவு செய்யப்பட்ட மூன்றாவது இலங்கையராவார்.

செவ்வாயன்று மாலை காலமான அவரது ஜனாஸா, நேற்று மாலை கொள்ளுப்பிட்டி பகதல வீதியிலுள்ள இவரது இல்லத்திலிருந்து ஜாவத்தை பள்ளிவாசலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பெருந்தொகையானோரது பிரசன்னத்துடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜாவத்தை பள்ளிக்கு வந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இறுதி மரியாதை செலுத்தினார்.

**இன்றைய நவமணியின் ஆசிரியர் தலையங்கம் (பக்கம் - 04) இவரைப் பற்றியது**

# Sports
விளையாட்டுச் செய்திகள்

16 வயதிற்குட்பட்ட சர்வதேச கால்பந்து தொடர்:

## 4 நாடுகளின் பங்குபற்றலுடன் மார்ச் 11இல் கொழும்பில் ஆரம்பம்






**பீ.எப்.எம் றிஷாட்**

ஜப்பான் அரசினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நாளைய தினத்துக்காக விளையாட்டு திட்டத்தின் கீழ் தெற்காசிய நாடுகளான இலங்கை, நேபாளம், பூட்டான் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் பங்கேற்கும் 16 வயதிற்குட்பட்ட கால்பந்தாட்டப் போட்டித் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் நடைபெறவுள்ளது.

2020ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கு இணைந்ததாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்போட்டித் தொடருக்கு ஜப்பான் அர' பூரண அனுசரணை வழங்குகின்றது. எனினும், இப்போட்டித் தொடர் இவ்வருடம் நடைபெறவுள்ள 16 வயதிற்குட்பட்ட தெற்காசிய கால்பந்து தொடருக்கு சிறந்த பயிற்சியாகவும் அமையவுள்ளது. இதன்படி, 16 வயதிற்குட்பட்ட இலங்கை கால்பந்து அணியில் கொழும்பு சாஹிராக் கல்லூரியிலிருந்து 7 வீரர்களும், நீர்கொழும்பு மாரிஸ்டெல்லா, ஹமீட் அல்-ஹுசைனி மற்றும் யாழ்.புனித ஹென்றி கல்லூரியிலிருந்து தலா 2 வீரர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இந்நிலையில் 16 வயதிற்குட்பட்ட இலங்கை கால்பந்து அணியின் முன்னாள் தலைவர் கொழும்பு புனித பீட்டர்ஸ் கல்லூரியின் மொஹமட் சபீரும் இக்குழாமில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

மேலும், வட, கிழக்கு உள்ளிட்ட வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வீரர்களுக்கும் இம்முறை போட்டித் தொடரில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, அல்-அத்னான் கல்லூரியைச் சேர்ந்த மொஹமட் அத்னான், நாவலப்பிட்டிய புனித மேரி கல்லூரியைச் சேர்ந்த மொஹமட் பைஸர், நிட்டம்புவ ரன்பொகுனுகம மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மொஹமட் உமர், கண்டி விசன் சர்வதேச பாடசாலையைச் சேர்ந்த மொஹமட் ரிகாஸ், நீர்கொழும்பு அல்-ஹிலால் தேசிய பாடசாலையைச் சேர்ந்த மொஹமட் சிபான், உக்குவெல அஜ்மீர் தேசிய பாடசாலையைச் சேர்ந்த மொஹமட் ருக்ஷான், யாழ்.மகஜனாக் கல்லூரியைச் சேர்ந்த ரவிகுமார் தனுஜன், பேருவளை ஐ.எல்.எம் சம்சுதீன் தேசிய கல்லூரியைச் சேர்ந்த அப்துல்லா பாரிஸ் உள்ளிட்ட வீரர்களுக்கும் இலங்கை அணியில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இப்போட்டித் தொடர் லீக் முறையில் நடைபெறவுள்ளதுடன், போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு 3 புள்ளிகளும், வெற்றி-தோல்வியின்றி நிறைவடையும் போட்டிகளுக்கு ஒரு புள்ளியும் வழங்கப்படவுள்ளன. இதன்படி முதலிரண்டு இடங்களைப் பெற்றுக்கொள்ளும் அணிகள் இறுதிப் போட்டியில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பின்ஞ்ச், கிலிங்கர் அதிரடி ஆஸிக்கு ஆறுதல் வெற்றி

### தொடரை வென்றது இலங்கை



இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டி20 போட்டியில் அவுஸ்திரேலிய அணி 41 ஓட்டங்களால் ஆறுதல் வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி, அவுஸ்திரேலிய அணி சார்பில் ஹென்ரு டைக்கு பதிலாக அடம் சம்பா அணிக்குள் அழைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை அணி சார்பில் போட்டித் தடைக்குள்ளான நிரோஷன் திக்வெல்லவுக்கு பதிலாக தசுன் சானக அணிக்குள் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இதன்படி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான பின்ஞ்ச், கிலிங்கர் ஜோடி அதிரடியாக துடுப்பெடுத்தாடியிருந்தனர். இதில் அவ்வணியின் தலைவர் பின்ஞ்ச 30 பந்துகளில் அரைச்சதம் கடந்து அதிரடி காட்ட, தனது பங்கிற்கு கிலிங்கரும் அரைச்சதம் கடந்து அணியின் ஓட்ட எண்ணிக்கைக்கு பங்களிப்புச் செய்தனர். இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக லசித் மாலிக் மற்றும் தசுன் சானக ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 188 என்ற ஓட்ட இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி, 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இலங்கை அணி சார்பாக டில்ஷான் முனவீர 37 ஓட்டங்களையும், மிலிந்த சிறிவர்தன 35 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் அடெம் சம்பா மற்றும் போல்க்னர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன்படி 3 போட்டிகளைக் கொண்ட டி20 தொடரை 2க்கு 1 என இலங்கை அணி கைப்பற்றியது. போட்டியின் ஆட்டநாயகனாக சம்பாவும், தொடர் நாயகனாக அசேல குணரத்னவும் தெரிவானர்.

## இலங்கை ஏ அணியில் இளம் வீரர் சதீர

அண்மையில் நிறைவடைந்த கழகங்களுக்கிடையிலான முதற்தரப் போட்டியில் அதிக ஓட்டங்களைக் குவித்த கோல்ட் கிரிக்கெட் கழகத்தின் விக்கெட் காப்பாளரும், அதிரடி துடுப்பாட்ட வீரருமான 21 வயதுடைய சதீர சமரவிக்ரம இலங்கை ஏ அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

தற்போது இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து லயன்ஸ் கழகத்திற்கு எதிரான 2ஆவது 4 நாள் டெஸ்ட் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை தம்புள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலதுகை துடுப்பாட்ட வீரரான சதீர, 2016-2017 பருவகாலத்தில் முதற்தர கிரிக்கெட் போட்டிகளில் 1000 ஓட்டங்களைக் குவித்த ஒரேயொரு வீரராகத் திகழ்கிறார். இதுவரை 10 முதற்தர போட்டிகளில் விளையாடி 19 இன்னிங்ஸ்களுக்கு முகங் கொடுத்து 1016 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

கொழும்பு ஜோசப் கல்லூரியின் பழைய மாணவரான சதீர, இதுவரை 3 சதங்கள் உள்ளடங்கலாக 6 அரைச்சதங்களையும் பூர்த்தி செய்துள்ளார். 60 இற்கும் மேற்பட்ட சராசரி துடுப்பாட்ட வேகத்தை கொண்டுள்ள அவர், இங்கிலாந்து லயன்ஸ் அணியுடனான முதலாவது போட்டியில் இடம்பெறவில்லை. எனினும், கடந்த திங்களன்று நிறைவடைந்த அப்போட்டியில் இலங்கை ஏ 195 ஓட்டங்களால் படுதோல்வியைத் தழுவியது.

இதன்படி இளம்வீரர் சதீர சமரவிக்ரமவை ஏ அணியில் இணைத்துக் கொள்ள தெரிவுக் குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



## லங்கஷயார் அணியில் இணைந்தார் ஜுனைத்



இவ்வருடம் நடைபெறவுள்ள இங்கிலாந்தின் நெட்வெஸ்ட் டி20 போட்டிகளில் லங்கஷயார் அணியில் பாகிஸ்தான் அணியின் நட்சத்திர வேகப்பந்துவீச்சாளர் ஜுனைத் கான் விளையாடவுள்ளார்.

27 வயதான ஜுனைத், கடந்த 2011ஆம் ஆண்டு லங்கஷயார் அணிக்காக முதற்தடவையாகக் களமிறங்கி 8 போட்டிகளில் விளையாடி 12 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். அதேபோல 2014ஆம் ஆண்டு 10 போட்டிகளில் விளையாடி 19 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். எனினும் 2015ஆம் ஆண்டு இங்கிலாந்தின் றோயல் லண்டன் ஒருநாள் போட்டிகளுக்காக மிடில்செக்ஸ் அணிக்காக அவர் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டம்:

## கலம்போ எவ்.சியை வீழ்த்தியப்ளூஸ்டார்



**பீ.எப்.எம் றிஷாட்**

இம்முறை டயலொக் கிண்ண கால்பந்து தொடரில் பிரபல 2 அணிகளான ப்ளூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் மற்றும் கலம்போ எப்.சி அணிகள் மோதிக் கொண்ட தீர்க்கமான போட்டி அடைமழையின் காரணமாக முதல் பாதியுடன் கடந்த 19ஆம் திகதி நிறுத்தப்பட்டது. இதனையடுத்து போட்டியின் 2ஆவது பாதி போட்டி நேற்று மீண்டும் களனி மைதானத்தில் நடைபெற்றது. ஏற்கனவே நடைபெற்ற போட்டியின் முதல் பாதியின் 13ஆவது நிமிடத்தில் போட்டியின் முதலாவது கோலினை ப்ளூ ஸ்டார் அணி சார்பாக மொஹமட் பர்ஸீன் பெற்றுக்கொண்டார். இதன்படி, முதல் பாதியின் நிறைவில் ப்ளூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் 1-0 என முன்னிலை பெற்றது. எனினும் நேற்று நடைபெற்ற 2ஆவது பாதியிலும் ஆக்ரோஷமாக விளையாடிய கல்போ எவ்.சியால் எந்தவொரு கோல் ஒன்றையும் பெற்றுக்கெள்ளமுடியாமல் போக இறுதியில் 1க்கு 0 என தோல்வியைத் தழுவியது.

## கிழக்கில் ஸ்பீட் - டி20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி




**(யூ.கே.காலீத்தீன், எம்.வை.அமீர், எம் றிஸ்னாத்)**

கிழக்கு மாகாண கிரிக்கெட் வரலாற்றில் முதந்தடவையாக உள்ளூர் கிரிக்கெட் கழக அணிகள் மோதிக் கொள்ளும் சர்வதேச தரத்திலான மாபெரும் சமரான, ஸ்பீட் டி-20 சம்பியன்ஷிப் கிரிக்கெட் தொடர், பெப்ரவரி 24ஆம் திகதி முதல் ஏப்ரல் 14ஆம் திகதி வரை தொடர்ச்சியாக சாய்ந்தமருது வொலிவேரியன் பொது மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த சுற்றுப்போட்டியில் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் இருந்து (அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை) பிரபல்யமான 32 கழக அணிகள் மோதிக்கொள்ளவுள்ளன. இந்த சுற்றுத்தொடரில் வெற்றி பெறுகின்ற அணிக்கு ( ஒரு லட்சம் ரூபா ) பணப் பரிசும் பிரம்மாண்டமான வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படவுள்ளதுடன், இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொள்ளும் அணிக்கு ( ஐம்பது ஆயிரம் ரூபா ) பணப் பரிசும் பிரம்மாண்டமான வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த சுற்றுப்போட்டியினை பிமா விளையாட்டுக் கழகம் மற்றும் சாய்ந்தமருது ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் என்பவற்றில் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளதுடன், பிரதான அனுசரணையாளராக, இந்தியாவின் முன்னணி விளையாட்டு உபகரண தயாரிப்பாளரான ஸ்பீட் ஸ்போட்ஸ் நிறுவனம் விளங்குகின்றது.

அத்துடன், தொடரிற்கு இணை அனுசரணையாளராக ஸ்பீட் ஸ்போட்ஸ் நிறுவனத்தின் விளையாட்டு உபகரணங்களை நீவு முழுவதிலும் விநியோகிப்பதில் முதன்மையாளராகத் திகழும் கஸானா ஸ்போட்ஸ் நிறுவனம் (KHAZANA SPORTS) இருக்கின்றது.

இந்த சுற்றுப்போட்டி தொடெர்பான ஊடக கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை(19) சாய்ந்தமருது சி பிரீஸ் உணவகத்தில், போட்டியின் பிரதம ஏற்பாட்டாளரான ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக்கழகத்தின் செயலாளரும் மற்றும் ஆசிரியருமான அலியார் பைசர் தலைமையில் இடம்பெற்றதுடன், பிரதம அதிதியாக கொழும்பு கஸானா ஸ்போர்ட்ஸ் அதிபரும் இணை ஏற்பாட்டாளருமான எம். அஸ்கர் அலி கலந்துகொண்டார். அத்துடன் அதிதிகளாக ஹொலி ஹீரோஸ் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் மற்றும் ஆசிரியர் ஏ.ஆதம் பாவா அவர்களும் மற்றும் ஏற்பாட்டுக் குழுவின் உறுப்பினர்கள், தொடரில் பங்குபற்றும் அணிகளின் முக்கியஸ்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.



கல்முனை அல்மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வு கடந்த 15ஆம் திகதி பாடசாலை அதிபர் யு.எல்.எம் அமீன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக விளையாட்டுத்துறை பிரதியமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதியாக கல்முனை வலயக்கல்விப்பணிப்பளர் எம்.எஸ் அப்துல் ஜலில் அவர்களும் கலந்துகொண்டதுடன் தாருல்இல்மா, தாருல் ஹிக்மா, தாருல் நிஹ்மா ஆகிய இல்லங்களில் தாருல் இல்மா அணி வெற்றி கிண்ணத்தை கைப்பற்றியதுடன் நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளையும் அதிதிகளையும் படத்தில் காணலாம் (கல்முனையூர் அப்றாஸ்)

## மே.இ.தீவுகள் குழாமில் மீண்டும் கிரண் பவல்



இங்கிலாந்தக்கு எதிரான மேற்கிந்திய தீவுகள் ஒருநாள் அணியில் இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கிரண் பவல் இடம்பிடித்துள்ளார். இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாட உள்ளது. முதல் போட்டி எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதியும், 5 மற்றும் 9ஆம் திகதிகளில் இறுதி 2 போட்டிகளும் நடைபெறவுள்ளன. இந்நிலையில் 3 ஒருநாள் போட்டிகளுக்குமான மேற்கிந்திய தீவுகள் குழாம் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் தொடக்க வீரர் கிரண் பவல் இடம் பிடித்துள்ளார். இவர் கடைசியாக 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் சர்வதேச போட்டியில் விளையாடினார். அதன்பின் சுமார் 3 வருடங்கள் கழித்து அணியில் இடம்பிடித்துள்ளார்.

உள்ளூர் கழக மட்ட சுப்பர்-50 போன்ற தொடரில் சிறப்பாக விளையாடியதால் பவல் அணியில் இடம்பிடித்துள்ளார். ஆனால், சுலைமான் பென், விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான ஜொன்சன் சார்லஸ், சுனில் நரைன், சகலதுறை வீரர் மார்லன் சாமுவேல்ஸ் ஆகியோர் அணியில் இடம்பெறவில்லை.

## சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட்: 100 நாள் சுற்றுப்பயணம்



பாகிஸ்தான் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சஹிட் அப்ரிடியினால் எதிர்வரும் ஜுன் மாதம் இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள 8ஆவது சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான 100 நாள் சுற்றுப்பயணம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் டுபாயில் உள்ள ஐ.சி.சியின் தலைமையகத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. ஐ.சி.சி தரப்படுத்தலில் முதல் 8 இடங்களில் உள்ள அணிகள் பங்கேற்கும் இப்போட்டித் தொடர் எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதி முதல் 18ஆம் திகதி இங்கிலாந்தின் பல்வேறு நகரங்களில் நடைபெறவுள்ளது.

அத்துடன், இந்த 100 நாள் சுற்றுப்பயணத்தில் போட்டியில் பங்கேற்கும் 8 நாடுகள் உள்ளடங்கலாக உலகின் 19 பல்வேறு நகரங்களுக்கு கிரிக்கெட் ரசிகர்களின் பார்வைக்காக எடுத்துச்செல்லப்படவுள்ளது. இதன்படி எதிர்வரும் 2ஆம் திகதி இந்தியாவுக்கு கொண்டு வரப்படவுள்ள இந்தக் கிண்ணம், 18ஆம் திகதி பங்களாதேஷுக்கும், 22ஆம் திகதி கொழும்புக்கும், 28ஆம் திகதி பாகிஸ்தானுக்கும், ஏப்ரல் 4ஆம் திகதி தென்னாபிரிக்காவுக்கும், 15ஆம் திகதி நியூசிலாந்துக்கும், 19ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்கும் எடுத்துச்செல்லப்படவுள்ளன. அதனையடுத்து இறுதியாக மே மாதம் 2ஆம் திகதி இங்கிலாந்தை வந்தடையவுள்ளள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 23RD FEBRUARY 2017